ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2510 - 2026 ඔක්තෝබර් මස 09 වැනි සිකුරාදා - 2026.10.09

2510 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

	பக்கம்		பக்கம்
பதவிகள் - வெற்றிடம்	3476	பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்	3511

கவனிக்க.- ஒழுங்கமைகப்பட்ட குற்றச் செயல்களைக் தடுத்தல் 2026.10.02 ஆந் திகதிய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2026, ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

பிரசன்ன ஜயரத்ன,
அரசாங்க அமுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்த்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக்கு குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமமும் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு எதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டதால் கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிஞ்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அகத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுவலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை கேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் எதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) எதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

பதவிகள் - வெற்றிடம்

விசேட அறிவித்தல்

இலங்கை நிரந்தர கடற்படையில் (குறுகிய கால அதிகாரிகள் மற்றும் தன்னார்வ கடற்படையின் நேரடி அதிகாரிளுக்கான வெற்றிடங்கள்) தொடர்பாக, 2026 செத்தெம்பர் மாதம் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிக் குடியரசின் அரசாங்க வர்த்தமானி இலக்கம் 2506 இன் பகுதி I தொகுதி (II ஆ), பக்கங்கள் 38 முதல் 51 வரை பதவிகளுக்கான விண்ணப்பங்களை கோரும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2026 நவெம்பர் மாதம் 01 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கேடீடீசி. பெர்னாணடோ ஆர்எஸ்பி, வீஎஸ்வீ,
யூஎஸ்பி, ஆர்சீடீஎஸ்,
கடற்படைத் தளபதி.

10 - 517

பதவிகள் வெற்றிடம்

பதிவாளர் நாயகம் திணைக்களம்
முஸ்லிம்/ மேலதிக முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி (தமிழ் மொழி மூலம்)
நுவரெலியா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுளுக்குரிய முஸ்ஸிம்/ மேலதிக முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

02. இந்த பதவி ஊதியம் வழங்கப்படாத சேவையாவதுடன் இதற்காக ஆண்பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

03. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது வருடங்கள் 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

04. இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 65 ஆண்டுகள் ஆவதுடன் வயது 65 தொடக்கம் 70 வரை, பதிவாளரினால் மேற்கொள்ளப்படும் சேவையின் திருப்தித்தன்மை மற்றும் உடல், மன உறுதி ஆகியவற்றிற்கு அமைய ஆண்டுதோறும் சேவைக்காலம் நீடிக்கப்படும். அவ்வாறு சேவைக்காலம் நீடிக்கப்படாத எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறித்த பதிவாளரின் சேவை முடிவுறுத்தப்படும்.

05. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடது.

06. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம்/ தமிழ் மொழிக்கான (பதவிக்குரிய மொழி மூலம்) சிறப்பு சித்திகள் உட்பட க. பொ. த. (சா.த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு பாடங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

கருத்திற் கொள்ளவும்.- க. பொ. த. (சா./த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். மௌலவி சான்றிழ்

அல்லது அராபி டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல், மேற்குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளினைப் பூர்த்தி செய்திருத்தலாக கருதப்படும்.

07. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

08. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமூர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

09. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள் /கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு I" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இணையத் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

09. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2026, ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

ச. ஜலதீபன்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ஏ3,
பத்தரமுல்லை, டென்சில் கொப்பேகடுவை மாவத்தை,
2026, செத்தெம்பர் 28.

அட்டவணை

மாவட்டம்	*பிரதேச செயலகப் பிரிவு*	*விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்*	*விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி*
நுவரெலியா	நுவரெலியா	கந்தப்பல பிரதேச முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி (தமிழ் மொழி மூல)	மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், நுவரெலியா

10 - 448

பதிவாளர் நாயகம் திணைக்களம்
முஸ்லிம்/ மேலதிக முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி
கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம்/ மேலதிக முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

02. இந்த பதவி ஊதியம் வழங்கப்படாத சேவையாவதுடன் இதற்காக ஆண் /பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

03. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது வருடங்கள் 30 வருடங்காளுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

04. இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 65 ஆண்டுகள் ஆவதுடன் வயது 65 தொடக்கம் 70 வரை, பதிவாளரினால் மேற்கொள்ளப்படும் சேவையின் திருப்தித்தன்மை மற்றும் உடல், மன உறுதி ஆகியவற்றிற்கு அமைய ஆண்டுதோறும் சேவைக்காலம் நீடிக்கப்படும். அவ்வாறு சேவைக் காலம் நீடிக்கப்படாத எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறித்த பதிவாளரின் சேவை முடிவுறுத்தப்படும்.

05. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடது.

06. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம்/ தமிழ் மொழிக்கான (பதவிக்குரிய மொழி மூலம்) சிறப்பு சித்திகள் உட்பட க. பொ. த. (சா.த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு பாடங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

கருத்திற் கொள்ளவும்.- க. பொ. த. (சா./த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். மௌலவி சான்றிழ் அல்லது அராபி டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தில், மேற்குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளினைப் பூர்த்தி செய்திருத்தலாக கருதப்படும்.

07. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

08. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்ட செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

09. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள் /கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு I" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்ட பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இணையத் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

09. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2026, நவெம்பர் மாதம் 09 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

ச. ஜலதீபன்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ஏ3,
பத்தரமுல்லை, டென்சில் கொப்பேகடுவை மாவத்தை,
2026, செத்தெம்பர் 28.

அட்டவணை

மாவட்டம்	*பிரதேச செயலகப் பிரிவு*	*விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்*	*விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி*
கண்டி	உடுநுவர	உடுநுவர மற்றும் யடிநுவர பிரிவின் எலமல்தெனிய பிரதேச முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி	மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கண்டி

10 - 449

பதிவாளர் நாயகம் திணைக்களம்
சிங்கள மொழி பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம் (கண்டிய/ பொது) பதிவாளர் பதவி
கோகாலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

02. இந்த பதவிக்காக ஆண் /பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

03. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது வருடங்களுக்கு 30 இற்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்குமேற்படாதிருத்தல் வேண்டும்.

04. இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 65 ஆண்டுகள் ஆவதுடன் வயது 65 தொடக்கம் 70 வரை, பதிவாளரினால் மேற்கொள்ளப்படும் சேவையின் திருப்தித்தன்மை மற்றும் உடல், மன உறுதி ஆகியவற்றிற்கு அமைய ஆண்டுதோறும் சேவைக்காலம் நீடிக்கப்படும். அவ்வாறு சேவைக் காலம் நீடிக்கப்படாத எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறித்த பதிவாளரின் சேவை முடிவுறுத்தப்படும்.

05. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடது.

06. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்கள மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா.த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு பாடங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

கருத்திற் கொள்ளவும்.- க. பொ. த. (சா./த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

07. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

08. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்ட செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமூர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

09. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள் /கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு I" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்ட பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இணையத் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

09. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2026, நவெம்பர் மாதம் 09 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

ச. ஜலதீபன்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ஏ3,
பத்தரமுல்லை, டென்சில் கொப்பேகடுவை மாவத்தை,
2026, செத்தெம்பர் 28.

அட்டவணை

மாவட்டம்	*பிரதேச செயலகப் பிரிவு*	*விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்*	*விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி*
கேகாலை	மாவனல்ல	கும்பல்கம பிரிவின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி மற்றும் கல்பட கோரளை விவாக (கண்டி/பொது) பதிவாளர் பதவி	மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், கேகாலை

10 - 450

பதிவாளர் நாயகம் திணைக்களம்
சிங்கள மொழி பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம் (கண்டிய/ பொது) பதிவாளர் பதவி (தமிழ் மொழி மூலம்)
நுவரெலியா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

02. இந்த பதவிக்காக ஆண் /பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

03. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

04. இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 65 ஆண்டுகள் ஆவதுடன் வயது 65 தொடக்கம் 70 வரை, பதிவாளரினால் மேற்கொள்ளப்படும் சேவையின் திருப்தித்தன்மை மற்றும் உடல், மன உறுதி ஆகியவற்றிற்கு அமைய ஆண்டுதோறும்

சேவைக்காலம் நீடிக்கப்படும். அவ்வாறு சேவைக் காலம் நீடிக்கப்படாத எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறித்த பதிவாளரின் சேவை முடிவுறுத்தப்படும்.

05. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடது.

06. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்கள மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா.த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு பாடங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

கருத்திற் கொள்ளவும்.- க. பொ. த. (சா./த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

07. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

08. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்ட செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

09. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள் /கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு I" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்ட பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இணையத் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

09. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2026, நவெம்பர் மாதம் 09 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

ச. ஜலதீபன்,,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ஏ3,
பத்தரமுல்லை, டென்சில் கொப்பேகடுவை மாவத்தை,
2026, செத்தெம்பர் 28.

அட்டவணை

மாவட்டம்	*பிரதேச செயலகப் பிரிவு*	*விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்*	*விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி*
நுவரெலியா	ஹங்குரன்கெத்த	ஹோப்வத்த பிரதேச மேலதிக விவாக (கண்டி/ பொது) (தமிழ் மொழி மூல) பதிவாளர் பதவி	மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், நுவரெலியா

பதிவாளர் நாயகம் திணைக்களம்

சிங்கள மொழி பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம் / மேலதிக விவாகம் (கண்டிய/ பொது)
புதிவாளர் பதவி
புத்தளம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

02. இந்த பதவிக்காக ஊதியம் வழங்கப்படாத சேவையாவதுடன் இதற்காக ஆண் /பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

03. விண்ணப்பம் கோரப்படும் இறுதி தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

04. இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 65 ஆண்டுகள் ஆவதுடன் வயது 65 தொடக்கம் 70 வரை, பதிவாளரினால் மேற்கொள்ளப்படும் சேவையின் திருப்தித்தன்மை மற்றும் உடல், மன உறுதி ஆகியவற்றிற்கு அமைய ஆண்டுதோறும் சேவைக்காலம் நீடிக்கப்படும். அவ்வாறு சேவைக் காலம் நீடிக்கப்படாத எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறித்த பதிவாளரின் சேவை முடிவுறுத்தப்படும்.

05. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடது.

06. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்கள மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா.த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு பாடங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

கருத்திற் கொள்ளவும் - க. பொ. த (சா. த.) அல்லது அதற்கு சம்மான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தயடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தயடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

07. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

08. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்ட செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

09. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள் /கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு I" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்ட பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இணையத் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

10.பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2026, நவெம்பர் மாதம் 09 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

ச. ஜலதீபன்,,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ஏ3,
டென்சில் கொப்பேகடுவை மாவத்தை,
பத்தரமுல்லை,
2026, செத்தெம்பர் 22.

அட்டவணை

மாவட்டம்	*பிரதேச செயலகப் பிரிவு*	*விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்*	*விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி*
புத்தளம்	பல்லம	பல்லம பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி மற்றும் தெமல ஹத்பத்துவ பிரிவின் விவாகப் பதிவாளர் பதவி (சிங்கள மொழி மூலம்)	மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், புத்தளம்
புத்தளம்	ஆனமடுவ	கறம்பேபத்துவ பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி மற்றும் தெமல ஹத்பத்துவ பிரிவின் விவாகப் பதிவாளர் பதவி (சிங்கள மொழி மூலம்)	மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், புத்தளம்
புத்தளம்	கற்பிட்டி	சேத்தாபொல நாவக்காடு பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி மற்றும் புத்தளம் பத்துவ பிரிவின் விவாகப் பதிவாளர் பதவி (சிங்கள மொழி மூலம்)	மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட ச் செயலகம், புத்தளம்

10 - 452

பதிவாளர் நாயகம் திணைக்களம்
முஸ்லிம்/ மேலதிக முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி
நுவரெலியா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம்/ மேலதிக முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள், நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

02. இந்த பதவி ஊதியம் வழங்கப்படாத சேவையாவதுடன் இதற்காக ஆண் /பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

03. விண்ணப்பம் கோரப்படும் இறுதிக் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

04. இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 65 ஆண்டுகள் ஆவதுடன் வயது 65 தொடக்கம் 70 வரை, பதிவாளரினால் மேற்கொள்ளப்படும் சேவையின் திருப்தித்தன்மை மற்றும் உடல், மன உறுதி ஆகியவற்றிற்கு அமைய ஆண்டுதோறும்

சேவைக்காலம் நீடிக்கப்படும். அவ்வாறு சேவைக் காலம் நீடிக்கப்படாத எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறித்த பதிவாளரின் சேவை முடிவுறுத்தப்படும்.

05. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடது.

06. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம்/ தமிழ் மொழிக்காக (பதவிக்குரிய மொழி மூலம்) சிறப்புச் சித்திகள் உட்பட க. பொ. த (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

கருத்திற் கொள்ளவும்.- க. பொ. த. (சா./த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும். மொலவி சான்றிழ் அல்லது அராபி டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தில், மேற்குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளினைப் பூர்த்தி செய்திருத்தலாக கருதப்படும்.

07. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

08. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்ட செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமூர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

09. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள் /கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு I" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்ட பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இணையத் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

10. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2026, நவெம்பர் மாதம் 09 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

ச. ஜலதீபன்,,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ஏ3,
டென்சில் கொப்பேகடுவை மாவத்தை,
பத்தரமுல்லை,
2026, செத்தெம்பர் 28.

அட்டவணை

மாவட்டம்	*பிரதேச செயலகப் பிரிவு*	*விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்*	*விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி*
நுவரெலியா	கொத்மலை	கொத்மலை பிரிவின் கலபிடிய முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி	மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், நுவரெலியா

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் மேலதிக பணிப்பாளர் நாயகம் பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்களை கோரல் - 2026

2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 26(1) பிரிவின்படி, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் மேலதிக பணிப்பாளர் நாயகம் பதவிக்கான வெற்றிடத்திற்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. ஆட்சேர்ப்புக்கு அவசியமான தகைமைகள்:-

1.1 கல்வித் தகைமைகள் :

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டம் வழங்கும் நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்திலிருந்து சட்டம் தொடர்பான பட்டப் பின்படிப்பு பட்டத்தினை பெற்றிருத்தல் வேண்டும்;.

1.2 தொழில் சார் தகைமைகள் :

இலங்கை உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்திருத்தல் வேண்டும்.

1.3 அனுபவம் : இலங்கை உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்த பின்னர், குற்றவியல் வழக்குகளில் குறைந்தது 15 ஆண்டுகள் செயற்பாட்டு தொழில்முறை அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

1.4 உடல்சார் தகைமைகள்:

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் பணியாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை ஆற்றுவதற்கும் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

1.5 ஏனையவை :

- இலங்கைபிரசையாக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் சிறந்த நன்னடத்தை உடையவர்களாக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பங்கள் கோரும் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்குள், பதவிக்கான ஆட்சேர்ப்புக்குத் தேவையான தகைமைகள் அனைத்து வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

02. **வயது**

- ஆகக் குறைந்த எல்லை : 40 வருடங்கள்
- உச்ச எல்லை : 54 வருடங்கள

03. **சம்பளத் திட்டம்:-** ரூபா 212,000 - 10x4950 – ரூ. 261,500

அதன்படி, இந்தப் பதவிக்கான சம்பளக் குறியீடு AC-E-4-2025 மற்றும் ஆரம்பச் சம்பளப் படிநிலை ரூபா. 212000.00 ஆகும். மேலும், 2026.03.17 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட, இப்பதவிக்குப் பொருந்தக்கூடிய இதர படிகளும் வழங்கப்படும். (2027.01.01 க்கு முன்னர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டால், சம்பள விகிதத்தின் அட்டவணை II -இன் படி சம்பளம் வழங்கப்படும். அதாவது, வழங்கப்படும் சம்பளம் ரூபா 183,300.00 ஆக இருக்கும்.)

04. **ஆட்சேர்ப்பு முறை :-**

4.1 கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

4.1.1 கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை :

மதிப்பெண்கள் வழங்கப்படும் முக்கிய விடயங்கள்	உச்சப் புள்ளிகள்	தெரிவு செய்வதற்கு பரிசீலிக்கப்படும் ஆகக்குறைந்த புள்ளிகள்
1. மேலதிக கல்வித் தகைமைகள்	20	- 60
2. மேலதிக சேவை அனுபவம்	10	
3. ஆங்கில அறிவு	10	
4. நீதிமன்ற நடவடிக்கை தொடர்பிலான பரிந்துரை	30	
5.நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறன்கள்	30	
மொத்தப் புள்ளிகள்	100	

4.1.2 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை குழு 3 அங்கத்தவர்களை உள்ளடக்குதல் வேண்டும்.

4.1.3. தகைமை பெற்ற விண்ணப்பதாரர்களில், கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையில் மிக உயர்ந்த தகுதியை வெளிப்படுத்தும் விண்ணப்பதாரர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

4.1.4 ஆட்சேர்ப்பின் போது, மேலே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள முக்கிய பகுதிகளுக்கு ஒதுக்கப்பட்ட உச்சப் புள்ளிகள் உள்ளடக்கப்பட்டு, கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கான விரிவான புள்ளி வழங்கும் திட்டம் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும்.

05. **சேவையில் உள்ளீர்ப்பதற்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:-**

i. இந்த நியமனம், ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டு, 2026.09.01 ஆம் திகதியிட்ட 2504/07 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தின் விதிகளுக்கு உட்பட்டது.

ii. இந்தப் பதவி நிரந்தரமானது. ஊழியர் சேம நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி நலன்கள் உரித்தானது.

iii. இந்த நியமனம் 3 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது.

iv. தகுதிகாண் காலத்தின் முடிவில், திருப்திகரமான பணி, வருகை, நடத்தை மற்றும் செயலாற்றுகை தகுதித் தேர்வில் தேர்ச்சி பெறுதல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பணி நிரந்தரமாக்கப்படும்.

v. ஆணைக்குழுவால் அறிமுகப்படுத்தப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறையின்படி, உங்கள் செயலாற்றுகை தரம் ஆண்டுதோறும் மதிப்பீடு செய்யப்படும். அதன்படி, எதிர்கால சம்பள உயர்வுகள் வழங்கப்படும், மேலும் அந்த செயலாற்றுகை தரம் பதவி உயர்வுகளுக்கும் பயன்படுத்தப்படும்.

vi. 2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச்சட்டம், 2026.09.01 ஆம் திகதியிடப்பட்ட இல 2504/07 வர்த்தமானி அறிவித்தலில் உள்ளீர்க்கப்பட்டுள்ள இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் விதிகள், தாபன விதிகள் கோவை பாகம் II, நிதிப்பிரமாணங்கள் மற்றும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் அவ்வப்போது வெளியிடப்படும் விதிகள் மற்றும் சுற்றுநிருபங்களுக்கு இந்த நியமனம், உட்பட்டது.

vii. ஆட்சேர்ப்பிற்கான மொழிமூலம் ஆங்கிலம் ஆகும்.

viii. அரச கரும மொழி அல்லாத வேறு பயிற்று மொழியில் பணியில் சேர்ந்த அதிகாரிகள், தகுதிகாண் காலத்தில் அரச கரும மொழியில் பரிந்துரைக்கப்பட்ட தேர்ச்சியைப் பெற வேண்டும்.

ix. சேவை தேவையின் அடிப்படையில் இலங்கையின் எந்தப் பாகத்திலும்; பணி புரியக்கூடியவராய் இருத்தல் வேண்டும்.

06. விண்ணப்பதாரர்களின் ஆளடையாளம் :-

i. அனைத்து வகையிலும் முழுமையான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்:

ii. கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையில் தங்களின் ஆளடையாளத்தை நிரூபிக்க, பின்வரும் ஆளடையாள ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்;
(a) ஆட்பதிவு ஆணையாளரால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய ஆளடையாள அட்டை;
(b) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
(c) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

07. விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் முறை:

i. விண்ணப்பங்களை, பணிப்பாளர் நாயகம், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு, தபால் பெட்டி இல 1431, 36, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரிக்கு, 2026.11.09 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பதிவுத் தபால் மூலம் அனுப்பதல் வேண்டும். குறித்த திகதிக்குப் பிறகு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

ii. சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பத்தின் மாதிரிப் படிவம் இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களை A4 அளவுடைய தாளில் தயாரித்து ஆங்கிலத்தில் மட்டுமே பூர்த்தி செய்து சமர்ப்பித்தல் வேண்டும்.

iii. விண்ணப்பம் அடங்கிய உறையின் **இடது மேல் மூலையில் "மேலதிக பணிப்பாளர் நாயகம் பதவிக்கான திறந்த ஆட்சேர்ப்பிற்கு விண்ணப்பங்களை கோரல்"** எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

iv. விண்ணப்பத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பமானது சமாதான நீதவான்/சத்தியப்பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி/பிரசித்த நொத்தாரிசு/முப்படையைச் சேர்ந்த ஆணை பெற்ற உத்தியோகத்தர் ஒருவரால் அல்லது அரசாங்க நிறுவனத்தின் நிறைவேற்றுத்தர அதிகாரியால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

v. தபாலில் தொலைந்துவிட்டதாகவோ அல்லது தபாலில் தாமதமாகிய விண்ணப்பங்கள் குறித்த முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படாது. இறுதித் திகதி வரை விண்ணப்பங்களைத் தாமதப்படுத்தும் விண்ணப்பதாரர்கள் அதன் விளைவுகளைச் சந்திக்க நேரிடும்.

vi. விண்ணப்பத்துடன் பின்வரும் ஒவ்வொரு ஆவணத்தினதும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்றும் இணைக்கப்படல் வேண்டும், வேறு எந்த ஆவணங்களும் இணைக்கப்படக் கூடாது:
(a) தேசிய ஆளடையாள அட்டையின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி;
(b) பிறப்புச் சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி;
(c) மேலே விண்ணப்பித்த கல்வித் தகுதிகள் தொடர்பான சான்றிதழ்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள்.

குறிப்பு: விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளை சரிபார்ப்பதற்காக, நேர்முகத்தேர்வின் போது தொடர்புடைய ஆவணங்களின் மூலப்பிரதிகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

08. தவறான தகவல்களை வழங்குதல்.

ஆட்சேர்ப்புக்கு முன்னர் உங்கள் விண்ணப்பத்தில் வழங்கப்பட்ட ஏதேனும் தகவல் தவறானது அல்லது பிழையானது எனக் கண்டறியப்பட்டால், உங்கள் பரீட்சார்த்தி தகுதி இரத்து செய்யப்படும். ஆட்சேர்ப்புக்குப் பிறகு அத்தகைய தவறான அல்லது பிழையான தகவல் கண்டறியப்பட்டால், தொடர்புடைய நடைமுறைகளுக்கு உட்பட்டு உங்களைப் பணியிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

09. வெற்றிடங்களை நிரப்புவது/ நிரப்பாமல் விடுவது குறித்த இறுதி முடிவு, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும்.

10. ஆட்சேர்ப்பு சம்பந்தமாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் முடிவே இறுதியானது.

11. இந்த வர்த்தமானி அறிவிப்பின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை அல்லது வேறுபாடு இருப்பின், சிங்கள உரையே மேலோங்கும்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்.

ஆர்.எஸ்.ஏ. திசாநாயக்க,
பணிப்பாளர் நாயகம்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு,
தபால் பெட்டி இல : 1431,
36, மலலசேகர மாவத்தை,
கொழும்பு 07.
2026.09
மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்:

தொலைபேசி இல: 011-2582864
மின்னஞ்சல் முகவரி : da@ciaboc.gov.lk

மாதிரி விண்ணப்பப் படிவம்

(அலுவலக பாவணைக்கு மட்டும்)

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு
மேலதிக பணிப்பாளர் நாயகம் பதவிக்கு திறந்த ஆட்சேர்ப்பிற்கான விண்ணப்பப்படிவம்

ஆங்கிலம்

(விண்ணப்பப்படிவத்தை ஆங்கில பெரிய எழுத்துக்களில் நிரப்புதல் வேண்டும்)

1.0	1.1. முழுப் பெயர்	
	1.2. முழுப் பெயர் (சிங்களம்/ தமிழ்)	
	1.3. முதலெழுத்துக்களுடன் பெயர்	
2.0	2.1. நிரந்தர முகவரி	
	2.2. மாவட்டம்	
	2.3. மாகாணம்	
3.0	3.1. பாலினம் ஆண்/பெண்	
	3.2. தேசிய ஆளடையாள அட்டை இல.	
4.0	4.1. கையடக்க தொலைபேசி இல/வட்ஸ்அப் (whatsapp) இல.	
	4.2. நிரந்தர தொலைபேசி இல	
	4.3. மின்னஞ்சல் முகவரி	

5.0	5.1. பிறந்த திகதி	
	5.2. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதியில் வயது	வருடங்கள்: மாதங்கள்: நாட்கள்:
6.0	6.1. திருமணமானவர் /திருமணமாகாதவர்	
7.0	7.1. இனம்	
8.0	8.1. மதம்	

9.0 **கல்வித் தகைமைகள்:** மொழிமூலம்: .....

9.1 பெற்றுள்ள பட்டப்பின்படிப்பு பட்டங்கள் தொடர்பான விபரம்:

பட்டப்பின்படிப்பு பட்டத்தின் பெயர்	விடயப்பரப்பு	பல்கலைக்கழகம்/ நிறுவனம்	வகுப்பு சித்தி	பட்டப்பின் படிப்பு செல்லுபடியாகும் திகதி

10.0 தொழில்சார் தகைமைகள்:

.....
.....
.....

11.0 சேவை அனுபவம்:-

துறை	நிறுவனம்	காலம் (ஆண்டுகள்)

12.0 ஆங்கில மொழி நிபுணத்துவம் :

தகைமையை அத்தாட்சிப்படுத்தும் வகையில் முன்வைக்கப்படும் ஆவணம்
1.
2.
3.

13.0 மேலதிக கல்வித்தகைமைகள் :

.....
.....
.....
.....

14.0 **வேறு தகைமைகள் :**

.....
.....
.....
.....

15.0 **விண்ணப்பதாரரின் உறுதிமொழி:**

இந்த விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள், எனது அறிவுக்கு எட்டியவரை உண்மையானவை மற்றும் சரியானவை என்று நான் உறுதியளிக்கிறேன். ஆட்சேர்ப்புக்கு முன்னரோ அல்லது பின்னரோ, இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களில் ஏதேனும் ஒன்று தவறானது அல்லது துல்லியமற்றது எனக் கண்டறியப்பட்டால், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு எனது பரீட்சார்த்தி தகுதியை/அல்லது நியமனத்தை இரத்து செய்யும் உரிமையைக் கொண்டுள்ளது என்பதை நான் புரிந்துகொள்கின்றேன்.

இந்த ஆட்சேர்ப்பு தொடர்பாக நடைமுறையில் உள்ள விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்குக் கட்டுப்படவும், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின்படி நான் தகுதியற்றவன் எனக் கண்டறியப்பட்டால், ஆட்சேர்ப்புக்கு முன்னரோ அல்லது பின்னரோ எனது பரீட்சார்த்தி தகுதியை/அல்லது நியமனத்தை இரத்து செய்ய எடுக்கப்படும் எந்தவொரு முடிவுக்கும் உட்படுவதற்கும் நான் ஒப்புக்கொள்கின்றேன்.

.....
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி:.....

16.0 **கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்:**

இந்த விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ....., என்பவர் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், ... அன்று என் முன்னிலையில் கையொப்பமிட்டுள்ளார் என்றும் இதன்மூலம் உறுதிப்படுத்துகின்றேன்.

.....
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்
மற்றும் அலுவலக முத்திரை

கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் :-.....
.....
பதவி :-.....
முகவரி :-.....

திகதி :-.....

அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களம்

அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தின் ஆரம்ப நிலை தேர்ச்சியற்ற சேவை வகுதியின் (PL 1) பதவிகளுக்கான திறந்த ஆட்சேர்ப்பிற்கு விண்ணப்பங்கள் கோரல் - 2026

1.0 அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆரம்ப நிலை தேர்ச்சியற்ற சேவை வகுதியின் பதவிகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காகத் தகைமையுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2.0 அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தின் ஆரம்ப நிலைத் தேர்ச்சியற்ற சேவைப் பிரிவில் உள்ள பதவிகளுக்கான தற்போதைய வெற்றிடங்கள் கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர்	*வெற்றிடங்களின் எண்ணிக்கை*
பணி உதவியாளர்	10

3.0 சம்பள அளவுத்திட்டம்:

3.1 சம்பளக் குறியீடு - PL 1-2025

3.2 சம்பள அளவுத்திட்டம் - ரூ. 40,000.00 - 10 x 450 - 10 x 490 - 10 x 540 - 12 x 590 = ரூ. 61,880.00

குறிப்பு - (I) பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 10/2025 இன் அட்டவணை III இன்படி 2027.01.01 வரை சம்பளம் வழங்கப்படும் 2027.01.01 முதல் அட்டவணை II இன்படி சம்பளம் வழங்கப்படும்.

(II) இதற்கு மேலதிகமாக, அரசாங்கம் அவ்வப்போது அரச அலுவலர்களுக்கு வழங்கும் ஏனைய கொடுப்பனவுகளுக்கும் நீங்கள் உரித்துடையவராவீர்கள்.

3.3 சம்பள முறைமை:

தரம்	*ஆரம்பச் சம்பளப் படிநிலை*	*ஆரம்பச் சம்பளத் தொகை (ரூ.)*
III	படிநிலை 01	ரூ. 40,000.00
II	படிநிலை 12	ரூ. 44,990.00
I	படிநிலை 22	ரூ. 49,940.00
விசேட	படிநிலை 32	ரூ. 55,390.00

4.0 பதவியின் / பதவிகளின் தன்மை : நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதும்

5.0 ஆட்சேர்ப்புத் தரம் : தரம் III

6.0 மொழிமூலம் : சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்

7.0 ஒப்படைக்கப்படும் கடமைகள்:

அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர்	*கடமைகள்*
பணி உதவியாளர்	சேவை நிலையத்தைச் சுத்தம் செய்தல், பொருட்களைக் கொண்டு செல்ல உதவுதல், தொழில்நுட்ப பணியாளர்களின் உற்பத்தி மற்றும் சேவைப் பணிகளில் உதவுதல் மற்றும் பணிப்பாளர் நாயகத்தால் ஒப்படைக்கப்படும் ஏனைய கடமைகளை நிறைவேற்றுதல்.

8.0 இந்நியமனம் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும். நியமன அதிகாரியால் தீர்மானிக்கப்படும் விசேட காரணங்களின் அடிப்படையில் அக்காலத்தை நீடிப்பதற்கோ நியமனத்தை முடிவுறுத்துவதற்கோ நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

9.0 தகைமைகள்:

(I). கல்வித் தகைமைகள்:

க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில், குறைந்தபட்சம் இரண்டு (02) திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(II.) தொழிற் தகைமைகள் : ஏற்புடையதல்ல.

(III). அனுபவம் : ஏற்புடையதல்ல.

(IV.) உடல் தகுதி: ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் பணியாற்றவும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றவும் போதுமான உடல் மற்றும் உளத் தகுதியைப் பெற்றிருக்க வேண்டும்.

(V.) ஏனைய தேவைகள்

I. விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
II. விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.
III. பதவிக்கு ஆட்சேர்ப்பதற்குத் தேவையான 09 முதல் 10 வரையிலான தகைமைகள், விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தலில்/ வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள 2026.11.06 ஆம் திகதியன்று எல்லா வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

10.0 வயது : விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியன்று 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

11.0 ஆட்சேர்ப்பு முறை : கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் திறமை ஒழுங்கின்படி, நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

11.1 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை

பிரதான தலைப்புகள்	*அதிக பட்சம்*	*புள்ளியிடும் முறை*	*புள்ளிகள்*
மேலதிக கல்வித் தகைமைகள்	30	க.பொ.த. (உயர்தர) பரீட்சையின் பொதுச் சாதாரணப் பரீட்சையைத் தவிர்த்து, சித்தியடைந்த ஒவ்வொரு பாடத்திற்கும் நான்கு (04) புள்ளிகள்	12
		அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பெற்ற ஒரு வருடத்திற்குக் குறையாத டிப்ளோமா அல்லது அதற்குச் சமமான அல்லது உயர்ந்த தகைமை	08
		அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஆறு மாதங்கள் முதல் ஒரு வருடம் வரையிலான சான்றிதழ் பாடநெறி	06
		அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் மூன்று முதல் ஆறு மாதங்கள் வரையிலான சான்றிதழ் பாடநெறி	04
தொழிற் தகைமைகள் / பயிற்சி நெறிகள்	25	NVQ மட்டம் 2 தகைமை	05
	05	NVQ மட்டம் 3 தகைமை	08
	08	NVQ மட்டம் 4 அல்லது அதற்கு மேற்பட்ட தகைமை	12

பிரதான தலைப்புகள்	*அதிக பட்சம்*	*புள்ளியிடும் முறை*	*புள்ளிகள்*
சேவை அனுபவம்	30	அரசாங்க அல்லது தனியார் நிறுவனமொன்றில் பொருத்துதல், பற்றவைப்பு, இயந்திரப்பணி, வார்ப்பு, தச்சுப்பணி அல்லது ஏனைய இயந்திரப் பொறியியல் துறைகளில் பெற்ற ஒவ்வொரு வருட சேவை அனுபவத்திற்கும் ஐந்து (05) புள்ளிகள்	30
இணைப்பாட விதானச் செயற்பாடுகள்	10	விளையாட்டுச் சான்றிதழ்களுக்கு: மாகாண மட்ட வெற்றிகளுக்கு மூன்று (03) புள்ளிகளும் அகில இலங்கை மட்ட வெற்றிகளுக்கு ஐந்து (05) புள்ளிகளும் (ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வெற்றிகளுக்கு); பாடசாலை மாணவர் தலைவர் பதவிக்கு இரண்டு (02) புள்ளிகளும் வழங்கப்படும்	10
நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறமை	05	நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறமைக்கேற்ப புள்ளிகள் வழங்கப்படும்	05
		மொத்தம்	**100**

குறிப்பு - பதவிக்குரிய அனுபவம் ஏற்றுக்கொள்ளத்தக்க சான்றிதழ்களால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அத்தகைமைகள் விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியன்று செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

12.0 அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 01/2020 இன் ஏற்பாடுகளுக்கமைய விண்ணப்பதாரர் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்பட்டிருக்கக் கூடாது.

13.0 விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும்போது மிகவும் கவனமாகச் சரியான தகவல்களை வழங்க வேண்டும். தகைமைகள் பரிசீலிக்கப்படும் போது விண்ணப்பதாரர் தகுதியற்றவர் எனத் தெரியவந்தால் எந்த நிலையிலும் அவரது விண்ணப்ப நிலை இரத்துச் செய்யப்படலாம். விண்ணப்பதாரர் வழங்கிய தகவல் எப்போதாவது பொய்யானது எனத் தெரியவந்தால் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

14.0 விண்ணப்பம் குறித்த மாதிரிப் படிவத்திற்கமைய சமர்ப்பிக்கப்பட வேண்டும். அறிவித்தலில் உள்ள மாதிரி விண்ணப்பத்துடன் ஒத்துவராத மற்றும் பூர்த்தியற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

15.0 விண்ணப்பதாரரின் கையொப்பம் அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரம் பெற்ற அலுவலர், பொலிஸ் சேவையில் வர்த்தமானிப்படுத்தப்பட்ட பதவியொன்றை வகிக்கும் அலுவலர் அல்லது அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவியொன்றை வகிக்கும் பதவிநிலை அலுவலர் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

16.0 இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைக் கொண்டவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளனர் என்ற முன்கருத்தின் அடிப்படையில், குறித்த திகதியன்று அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த அனைவரும் அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். எனினும், அவ்வாறு அழைக்கப்படுவது விண்ணப்பதாரர் இப்பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதை ஏற்றுக்கொண்டதாகக் கருதப்படமாட்டாது. நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு அறிவித்தலுக்கமைய தகைமைகள் பரிசீலிக்கப்படும் போது தேவையான தகைமைகள் இல்லை எனத் தெரியவந்தால் அவர்களின் விண்ணப்ப நிலை இரத்துச் செய்யப்படும்.

17.0 விண்ணப்பதாரரின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த கீழ்காணும் ஆவணங்களில் ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும்:

I. ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை
II. செல்லுபடியாகும் இலங்கைச் சாரதி அனுமதிப்பத்திரம்
III. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு

18.0 இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அதுகுறித்து பணிப்பாளர் நாயகம் தீர்மானிப்பார். அனைத்து விண்ணப்பதாரர்களும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கமைய செயற்படக் கட்டுப்பட்டுள்ளனர்.

19.0 விண்ணப்பிக்கும் முறை:

அனைத்து விபரங்களையும் உள்ளடக்கி, இதனுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமைய முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம், கல்வித் தகைமைகள், தொழிற் தகைமைகள் மற்றும் சேவை அனுபவத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2026.11.06 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு "பணிப்பாளர் நாயகம், அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களம், கொலொன்னாவ வீதி, கொலொன்னாவ" என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் இடப்படும் உறையின் இடது மேல் மூலையில் "ஆரம்ப நிலை தேர்ச்சியற்ற சேவை வகுதியின் தரம் III இற்கான திறந்த ஆட்சேர்ப்பு - 2026" எனத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

பொறி. எஸ். என். பி. எம். பத்மசிறி,
பணிப்பாளர் நாயகம்.

அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களம்,
கொலொன்னாவ வீதி,
கொலொன்னாவ,
2026, ஒற்றோபர் 09.

மாதிரி விண்ணப்பப்படிவம்

அலுவலகப் பயன்பாட்டிற்கு மட்டும்

அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தின் ஆரம்பநிலை தேர்ச்சியற்ற சேவை வகுதியின் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு - 2026
Recruitment to the posts in the Primary Unskilled Service Category of the Department of Government Factory – 2026

விண்ணப்பிக்கும் மொழிமூலம்:
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(பொருத்தமான இலக்கத்தை கட்டத்திற்குள் எழுதவும்)

1. (அ) முழுப் பெயர் (ஆங்கிலப் பெரிய எழுத்துகளில்):

.....
(உதா: HERATH MUDIYANSELAGE SAMAN RATHNAYAKA)

(ஆ) முதலெழுத்துகளுடன் பெயர் (ஆங்கிலப் பெரிய எழுத்துகளில்):
.....
(உதா: H. M. S. RATHNAYAKA)
(இ) முழுப் பெயர் (தமிழில்):
.....

2. (அ) நிரந்தர முகவரி (சிங்களத்தில் / தமிழில்):

.....

.....

(ஆ) அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கிலப் பெரிய எழுத்துகளில்):

.....

....

(இ) அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி (சிங்களத்தில் / தமிழில்):

.....

.....

3. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

4. பால் : பெண் - 0
ஆண் - 1 | |
(பொருத்தமான இலக்கத்தை கட்டத்திற்குள் எழுதவும்)

5. பிறந்த திகதி : ஆண்டு: | | | | | மாதம்: | | திகதி: | |

6. விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதியன்று வயது : வருடங்கள் : | | மாதங்கள் : | | நாட்கள்: | |

7. தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |

8. கல்வித் தகைமைகள்: (பொருத்தமான சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்)

8.1 க.பொ.த. (சாதாரண தர) பரீட்சை விபரங்கள்

I. முதல் தடவை பெறுபேறுகள்

பரீட்சைச் சுட்டெண் : .....

வருடம் ..... மாதம் .....

பாடம்	*சித்தி*	*பாடம்*	*சித்தி*
1.		6.	
2.		7.	
3.		8.	
4.		9.	
5.		10.	

II. இரண்டாம் தடவை பெறுபேறுகள்

பரீட்சைச் சுட்டெண் : .....

வருடம் ..... மாதம் .....

பாடம்	*சித்தி*	*பாடம்*	*சித்தி*
1.		6.	
2.		7.	
3.		8.	
4.		9.	
5.		10.	

8.2 **க.பொ.த. (உயர்தர) பரீட்சை விபரங்கள்**

I. பரீட்சை நடைபெற்ற வருடமும் மாதமும் : .....

II. பரீட்சைச் சுட்டெண் : .....

பெறுபேறுகள்

பாடம்	*சித்தி*
1.	
2.	
3.	
4.	

9. **மேலதிகக் கல்வித் தகைமைகள்: (பொருத்தமான சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்.)**

இல.	*நிறுவனம்*	*பாடநெறியின் பெயர்*	*கால எல்லை*	*செல்லுபடித் திகதி*

10. **தொழிற்தகைமைகள்: (பொருத்தமான சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்.)**

இல.	*நிறுவனம்*	*பாடநெறியின் பெயர்*	*NVQ மட்டம்*	*கால எல்லை*	*செல்லுபடித் திகதி*

11. **பதவிக்குரிய சேவை அனுபவம்:**

இல.	*சேவைக் காலம்*		*பதவி*	*சேவை நிலையம்*
	முதல்	*வரை*		

12. இணைப்பாட விதான செயற்பாடுகள்: .....
.....
.....
.....

13. தற்போது ஏதேனும் அரசாங்க நிறுவனத்தில் பதவி வகித்தால் அதன் விபரங்கள்:

I. பதவியும் தரமும் :.....
II. நியமனத் திகதி :.....
III. நிறுவனம் :.....
IV. ஓய்வூதிய உரிமையுள்ள நிரந்தர பதவியா :.....

14. நீங்கள் எப்போதாவது ஏதேனும் குற்றச்சாட்டில் நீதிமன்றத்தால் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீர்களா? (பொருத்தமான கட்டத்தில் √ குறியிடவும்.)
ஆம் எனில் விபரங்களைக் குறிப்பிடவும்.
ஆம் ☐ இல்லை ☐

.....
.....
.....

15. **விண்ணப்பதாரரின் உறுதிமொழி**

(அ) இந்த விண்ணப்பத்தில் நான் வழங்கியுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு எட்டியவரை உண்மையானவை மற்றும் சரியானவை என தாழ்மையுடன் உறுதிப்படுத்துகிறேன். இதன் ஏதேனும் பகுதியை நிரப்பாமையால் மற்றும்/அல்லது தவறாக நிரப்பியதால் ஏற்படக்கூடிய இழப்பை ஏற்றுக்கொள்கிறேன். மேலும், அனைத்து பகுதிகளும் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்றும் பிரகடனப்படுத்துகிறேன்.

(ஆ) நான் வழங்கிய இந்த உறுதிமொழி பொய்யானது என நிரூபிக்கப்பட்டால், நியமனத்திற்கு முன் தகுதியற்றவராவேன் என்றும் நியமனத்தின் பின்னர் சேவையிலிருந்து நீக்கப்படலாம் என்றும் அறிவேன்.

(இ) இங்கு குறிப்பிடப்பட்ட எந்தத் தகவலையும் பின்னர் மாற்றமாட்டேன்.

(ஈ) கல்வி மற்றும் தொழிற்தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்துச் சமர்ப்பிக்கிறேன்.

திகதி: ....
விண்ணப்பதாரரின் கையொப்பம்

16. விண்ணப்பதாரரின் கையொப்பத்தைச் சான்றுப்படுத்தல்: (பொருத்தமற்ற சொற்களை நீக்கவும்)

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ..... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் ..... ஆம் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் சான்றுப்படுத்துகிறேன்.

திகதி: ....
சான்றுப்படுத்துபவரின் கையொப்பம்

சான்றுப்படுத்துபவரின் பெயர் : .....
பதவி : .....
முகவரி :.....
உத்தியோகபூர்வ முத்திரை : .....

குறிப்பு - விண்ணப்பம் வர்த்தமானி அறிவித்தலின் 15 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

17. அரசாங்க சேவை / மாகாண அரசாங்க சேவையில் பணிபுரிபவராக இருப்பின், நிறுவனத் தலைவரின் சான்றிதழ்:

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி..... என்பவர் இவ்வமைச்சில்/திணைக்களத்தில்/கூட்டுத்தாபனத்தில்/சபையில் பணிபுரிகிறார். அவர் மேற்படி பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் இந்நிறுவனச் சேவையிலிருந்து விடுவிக்க முடியும் / முடியாது என்பதைத் தெரிவிக்கிறேன்.

.....
நிறுவனத் தலைவரின் கையொப்பம்

நிறுவனத் தலைவரின் பெயர் : .....
பதவி : .....
பணியிட முகவரி : .....
உத்தியோகபூர்வ முத்திரை : .....

10 - 488

அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களம்

**அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தின்
ஆரம்ப நிலை அரைத் தேர்ச்சியுடைய சேவை வகுதியின் (PL 2) பதவிகளுக்கான திறந்த ஆட்சேர்ப்பிற்கு
விண்ணப்பங்கள் கோரல் - 2026**

1. அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆரம்ப நிலை அரைத் தேர்ச்சியுடைய சேவை வகுதியின் பதவிகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காகத் தகைமையுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தின் ஆரம்பநிலை அரைத் தேர்ச்சியுடைய சேவை வகைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ள பதவிகளின் வெற்றிடங்கள் கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

தொடர் இல.	*அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர்*	*வெற்றிடங்களின் எண்ணிக்கை*
01.	மின்சாரப் பாரந்தூக்கி இயக்குநர் (Electric Crane Operator)	01
02.	உலை இயக்குநர் உதவியாளர் (Furnanceman Assistant)	01
03.	பொருத்துநர் (பொது) உதவியாளர் (Fitter (General) Assistant)	05
04.	இயந்திர இயக்குநர் (உற்பத்தி) உதவியாளர் (Machine Operator (Production) Assistant)	01
05.	இயந்திரப்பணியாளர் உதவியாளர் (Machinist Assistant)	03
06.	வார்ப்பாளர் உதவியாளர்(Molder Assistant)	04
07.	வார்ப்பு மாதிரி தயாரிப்பாளர் உதவியாளர் (Pattern Maker Assistant)	01
08.	குளிரூட்டல் மற்றும் வளிச்சீராக்கல் தொழில்நுட்ப உதவியாளர் (Refrigeration and Air Conditioning Technician Assistant)	01
09.	கருவி மற்றும் அச்சு தயாரிப்பாளர் உதவியாளர் (Tool and Die Maker Assistant)	01

தொடர் இல.	*அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர்*	*வெற்றிடங்களின் எண்ணிக்கை*
10.	தச்சர் (கட்டிடங்கள்) உதவியாளர் (Carpenter (Building) Assistant)	01
11.	தச்சர் (தளபாடங்கள்) உதவியாளர் (Carpenter (Furniture) Assistant	01
12.	வாகனக் கூரை மற்றும் மெத்தைப்பணி உதவியாளர் (Hood Maker & Upholster Assistant)	01
13.	குழாய் பொருத்துநர் உதவியாளர் (Pipe Fitter Assistant)	01
	மொத்தம்	**22**

- **சம்பள அளவுத்திட்டம்:**

3.1 சம்பளக் குறியீடு - PL 2-2025

3.2 சம்பள அளவுத்திட்டம் - ரூ. 41,800.00 - 10 x 490 - 10 x 540 - 10 x 590 - 12 x 630 - ரூ. 65,560.00

குறிப்பு - (I) பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 10/2025 இன் அட்டவணை III இன்படி 01.01.2027 வரை சம்பளம் வழங்கப்படும்; 01.01.2027 முதல் அட்டவணை II இன்படி சம்பளம் வழங்கப்படும்.

(II) இதற்கு மேலதிகமாக, அரசாங்கம் அவ்வப்போது அரசாங்க அலுவலர்களுக்கு வழங்கும் ஏனைய கொடுப்பனவுகளுக்கும் நீங்கள் உரித்துடையவராவீர்கள்.

3.3 சம்பள முறைமை:

தரம்	*ஆரம்பச் சம்பளப் படிநிலை*	*ஆரம்பச் சம்பளத் தொகை (ரூ.)*
III	படிநிலை 01	ரூ. 41,800/-
II	படிநிலை 12	ரூ. 47,240/-
I	படிநிலை 22	ரூ. 52,690/-
விசேட	படிநிலை 32	ரூ. 58,630/-

4.0 பதவியின் / பதவிகளின் தன்மை : நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதும்

5.0 ஆட்சேர்ப்புத் தரம் : தரம் III

6.0 மொழி மூலம் : சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்

7.0 ஒப்படைக்கப்படும் கடமைகள்:

அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர்	*கடமைகள்*
மின்சாரப் பாரந்தூக்கி இயக்குநர் (Electric Crane Operator)	இயந்திர மற்றும் மின்சாரப் பாரந்தூக்கிகளை இயக்குதல் மற்றும் அவற்றின் சிறிய பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்.
உலை இயக்குநர் உதவியாளர் (Furnanceman Assistant)	வார்ப்புப் பணிகளுக்குத் தேவையான உலைகளை இயக்குதல் மற்றும் உலைத் திருத்தப் பணிகளுக்கு உதவுதல்.

அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர்	***கடமைகள்***
பொருத்துநர் (பொது) உதவியாளர் (Fitter (General) Assistant)	பெரிய அளவிலான கதவுகளின் தயாரிப்பு உட்பட அனைத்து கனரகப் பொருத்துப் பணிகளையும் மேற்கொள்ளுதல் மற்றும் இயந்திரத் திருத்தப் பணிகளுக்கு உதவுதல்.
இயந்திர இயக்குநர் (உற்பத்தி) உதவியாளர் (Machine Operator (Production) Assistant)	ஆணி தயாரிக்கும் இயந்திரங்கள், வாள் திருத்த இயந்திரங்கள் போன்றவற்றை இயக்குதல் மற்றும் அவற்றின் சிறிய பராமரிப்புப் பணிகளுக்கு உதவுதல்.
இயந்திரப்பணியாளர் உதவியாளர் (Machinist Assistant)	போரிங், மில்லிங், லேத் மற்றும் துளையிடும் இயந்திரங்களை இயக்குதல்; உலோகப் பாகங்களைத் தேவைக்கேற்ப இயந்திரப்படுத்துதல்; சிறிய சேவைப் பணிகளுக்கு உதவுதல்.
வார்ப்பாளர் உதவியாளர் (Molder Assistant)	வார்ப்புக்குத் தேவையான அச்சுகளைத் தயாரித்தல், அவற்றை வார்ப்புப் பணிக்குத் தயார்படுத்துதல் மற்றும் வார்ப்பின்போது உதவுதல்.
வார்ப்பு மாதிரி தயாரிப்பாளர் உதவியாளர் (Pattern Maker Assistant)	வார்ப்பு அச்சுகளைத் தயாரிப்பதற்குத் தேவையான மர மாதிரிகளைச் செய்வதற்கு உதவுதல்.
குளிரூட்டல் மற்றும் வளிச்சீராக்கல் தொழில்நுட்ப உதவியாளர் (Refrigeration and Air Conditioning Technician Assistant)	அனைத்து வகையான வளிச்சீராக்கல் உபகரணங்களின் சேவை மற்றும் திருத்தப் பணிகளுக்கு உதவுதல்.
கருவி மற்றும் அச்சு தயாரிப்பாளர் உதவியாளர் (Tool and Die Maker Assistant)	கருவிகள் மற்றும் பல்வேறு வடிவ உலோகப் பாகங்களைத் தயாரிப்பதற்குத் தேவையான அச்சுகளை உருவாக்குதல் மற்றும் அவற்றின் திருத்தப் பணிகளுக்கு உதவுதல்.
தச்சர் (கட்டிடங்கள்) உதவியாளர் (Carpenter (Building) Assistant)	கட்டிட நிர்மாணத்திற்குத் தேவையான கூரைகள், கதவு நிலைகள், சாளரங்கள் உள்ளிட்ட அனைத்துத் தச்சுப் பணிகளையும் மேற்கொள்ளுதல் மற்றும் அவற்றின் திருத்தப் பணிகளுக்கு உதவுதல்.
தச்சர் (தளபாடங்கள்) உதவியாளர் (Carpenter (Furniture) Assistant	மரத்தால் தயாரிக்கப்படும் அனைத்து வகையான தளபாடங்களையும் உருவாக்குதல், மெருகூட்டுதல் மற்றும் அவற்றின் திருத்தப் பணிகளுக்கு உதவுதல்.
வாகனக் கூரை மற்றும் மெத்தைப்பணி உதவியாளர் (Hood Maker & Upholster Assistant)	மெத்தைப் பணிகள், திரைத் துணிகளைத் தைத்துப் பொருத்துதல் மற்றும் நிகழ்வுகளுக்குக் கம்பளங்கள் மற்றும் விழா நடைபாதைகளை அமைத்தல் ஆகியவற்றுக்கு உதவுதல்.
குழாய் பொருத்துநர் உதவியாளர் (Pipe Fitter Assistant)	வாயு அமுக்க இயந்திரம் மற்றும் கொதிகலன்களை இயக்குதல் மற்றும் அவற்றின் சிறிய பராமரிப்புப் பணிகளுக்கு உதவுதல்.

8.0 தகைமைகள்:

(I). கல்வித் தகைமைகள்:

I. க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில், குறைந்தபட்சம் இரண்டு (02) திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்

குறிப்பு :

I. பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 28/2016 இன்படி, NVQ மட்டம் 3 தகைமையைப் பெற்றுள்ள விண்ணப்பதாரருக்கு I ஆம் விடயத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட கல்வித் தகைமைகள் ஏற்புடையதல்ல

(II). தொழிற் தகைமைகள்:

I. ஒவ்வொரு பதவிக்கும் உரிய கடமைகள் தொடர்பாக, மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப அல்லது தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழில் தகைமை மட்டம் 2 (NVQ 02) இற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தின் ஆரம்ப நிலை அரைத் தேர்ச்சியுடைய சேவை வகுதிக்கான திறந்த ஆட்சேர்ப்பிற்குரிய தொழிற் தகைமைகள்

பதவி	*தொழிற் தகைமை*
மின்சாரப் பாரந்தூக்கி இயக்குநர் (Electric Crane Operator)	I. NVQ மட்டம் 2 அல்லது II. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் குறைந்தபட்சம் 1 வருடப் பாடநெறி சான்றிதழுடன், மின்சாரப் பாரந்தூக்கிகளை இயக்குவதில் குறைந்தபட்சம் 2 வருட அனுபவம்.
உலை இயக்குநர் உதவியாளர் (Furnanceman Assistant)	I. NVQ மட்டம் 2 அல்லது II. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் குறைந்தபட்சம் 1 வருடப் பாடநெறி சான்றிதழுடன், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் 2 வருட அனுபவம்.
பொருத்துநர் (பொது) உதவியாளர் (Fitter (General) Assistant)	I. NVQ மட்டம் 2 அல்லது II. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் குறைந்தபட்சம் 1 வருடப் பாடநெறி சான்றிதழுடன், இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் அச்சுப் பாகங்களை பொருத்துவதில் குறைந்தபட்சம் 2 வருட அனுபவம்.
இயந்திர இயக்குநர் (உற்பத்தி) உதவியாளர் (Machine Operator (Production) Assistant)	I. NVQ மட்டம் 2 அல்லது II. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் குறைந்தபட்சம் 1 வருட இயந்திர இயக்குநர் பாடநெறி சான்றிதழுடன், உற்பத்தி இயந்திரங்களை இயக்குவதில் குறைந்தபட்சம் 2 வருட அனுபவம்.
இயந்திரப்பணியாளர் உதவியாளர் (Machinist Assistant)	I. NVQ மட்டம் 2 அல்லது II. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் குறைந்தபட்சம் 1 வருட இயந்திரப்பணி பாடநெறி சான்றிதழுடன், இயந்திரப்படுத்தலில் குறைந்தபட்சம் 2 வருட அனுபவம்.
வார்ப்பாளர் உதவியாளர் (Molder Assistant)	I. NVQ மட்டம் 2 அல்லது II. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் குறைந்தபட்சம் 1 வருட வார்ப்புப் பாடநெறி சான்றிதழுடன், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் வார்ப்பாளராக குறைந்தபட்சம் 2 வருட அனுபவம்.
வார்ப்பு மாதிரி தயாரிப்பாளர் உதவியாளர் (Pattern Maker Assistant)	I. NVQ மட்டம் 2 அல்லது II. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் குறைந்தபட்சம் 1 வருட வார்ப்பு மாதிரி தயாரிப்புப் பாடநெறி சான்றிதழுடன், வார்ப்பு மாதிரி தயாரிப்பில் குறைந்தபட்சம் 2 வருட அனுபவம்.

பதவி	*தொழிற் தகைமை*
குளிரூட்டல் மற்றும் வளிச்சீராக்கல் தொழில்நுட்ப உதவியாளர் (Refrigeration and Air Conditioning Technician Assistant)	I. NVQ மட்டம் 2 அல்லது II. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் குறைந்தபட்சம் 1 வருட வளிச்சீராக்கல் பாடநெறி சான்றிதழுடன், குளிரூட்டல், ஆழ் குளிரூட்டல் மற்றும் வளிச்சீராக்கல் அமைப்புகளைப் பொருத்துதல் மற்றும் திருத்துவதில் குறைந்தபட்சம் 2 வருட அனுபவம்.
கருவி மற்றும் அச்சு தயாரிப்பாளர் உதவியாளர் (Tool and Die Maker Assistant)	I. NVQ மட்டம் 2 அல்லது II. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் குறைந்தபட்சம் 1 வருட கருவி மற்றும் அச்சுத் தயாரிப்புப் பாடநெறி சான்றிதழுடன், கருவி மற்றும் அச்சுத் தயாரிப்பில் குறைந்தபட்சம் 2 வருட அனுபவம்.
தச்சர் (கட்டிடங்கள்) உதவியாளர் (Carpenter (Building) Assistant)	I. NVQ மட்டம் 2 அல்லது II. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் குறைந்தபட்சம் 1 வருட கட்டிடக் கூரை அமைப்புப் பாடநெறி சான்றிதழுடன், கட்டிடத் தச்சுப் பணியில் குறைந்தபட்சம் 2 வருட அனுபவம்.
தச்சர் (தளபாடங்கள்) உதவியாளர் (Carpenter (Furniture) Assistant)	I. NVQ மட்டம் 2 அல்லது II. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் குறைந்தபட்சம் 1 வருடத் தளபாடத் தயாரிப்புப் பாடநெறி சான்றிதழுடன், தளபாடத் தயாரிப்பில் குறைந்தபட்சம் 2 வருட அனுபவம்.
வாகனக் கூரை மற்றும் மெத்தைப்பணி உதவியாளர் (Hood Maker & Upholster Assistant)	I. NVQ மட்டம் 2 அல்லது II. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் குறைந்தபட்சம் 1 வருடப் பாடநெறி சான்றிதழுடன், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் 2 வருட அனுபவச் சான்றிதழ்.
குழாய் பொருத்துநர் உதவியாளர் (Pipe Fitter Assistant)	I. NVQ மட்டம் 2 அல்லது II. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் குறைந்தபட்சம் 1 வருடப் பாடநெறி சான்றிதழுடன், கொதிகலன் மற்றும் காற்றமுக்கித் துறையில் குறைந்தபட்சம் 2 வருட அனுபவம்.

(III). அனுபவம் : உரிய துறையில் பெற்ற அனுபவம் மேலதிகத் தகைமையாகக் கருதப்படும்.

(IV). உடல் தகுதி: ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் பணியாற்றவும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றவும் போதுமான உடல் மற்றும் உளத் தகுதியைப் பெற்றிருக்க வேண்டும்.

(V). ஏனைய தகைமைகள்

I. விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
II. விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.
III. பதவிக்கு ஆட்சேர்ப்பதற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளும் விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தலில்/ வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள 2026.11.06 திகதியன்று எல்லா வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

9.0 வயது: விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியன்று 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

10.0 ஆட்சேர்ப்பு முறை: தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை மற்றும் பதவிக்குரிய அறிவைப் பரிசோதிக்கும் தொழில்முறைப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

10.1 தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை

பிரதான தலைப்புகள்	*அதிகபட்சப் புள்ளிகள்*	*புள்ளியிடும் முறை*	*புள்ளிகள்*
மேலதிக கல்வித் தகைமைகள்	15	• க.பொ.த. (உயர்தர) பரீட்சையின் பொதுச் சாதாரணப் பரீட்சையைத் தவிர்த்து, சித்தியடைந்த ஒவ்வொரு பாடத்திற்கும் மூன்று (03) புள்ளிகள்	09
		• அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பெற்ற ஒரு வருடத்திற்குக் குறையாத டிப்ளோமா அல்லது அதற்குச் சமமான அல்லது உயர்ந்த தகைமை	04
		• அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஆறு மாதங்களுக்குக் குறையாத அல்லது நிர்ணயிக்கப்பட்ட மணித்தியாலங்களைப் பூர்த்திசெய்த சான்றிதழ் பாடநெறி	02
மேலதிக தொழிற் தகைமைகள்	35	விண்ணப்பிக்கும் துறையில் NVQ மட்டம் 3 அல்லது அதற்கு மேற்பட்ட தகைமை	25
		வேறு துறையில் NVQ மட்டம் 3 அல்லது அதற்கு மேற்பட்ட தகைமை	10
மேலதிக அனுபவம்	45	அரசாங்க அல்லது பதிவுசெய்யப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் உரிய துறையில் பெற்ற ஒவ்வொரு வருட அனுபவத்திற்கும் ஐந்து (05) புள்ளிகள்	45
நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் தலைமைத்துவம், மனப்பாங்கு, ஆளுமை மற்றும் தொடர்பாடல் திறன்கள்	05	நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறமைக்கேற்ப புள்ளிகள் வழங்கப்படும்	05
மொத்தம்	**100**		

10.2 அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தின் ஆரம்ப நிலை அரைத் தேர்ச்சியுடைய சேவை வகுதிக்கான திறந்த ஆட்சேர்ப்பிற்குரிய தொழில்முறைச் செய்முறைப் பரீட்சை

பதவி	*பாடம்*	*பாடத்திட்டம்*	*நேரம்*	*மொத்தப் புள்ளிகள்*	*சித்திப் புள்ளிகள்*
மின்சாரப் பாரந்தூக்கி இயக்குநர்	விடய அறிவு	செய்முறைப் பரீட்சையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடத்துறைகளில் இரண்டில் சித்தியடைந்திருக்க வேண்டும். • பாரந்தூக்கியை இயக்கத் தயார்படுத்துதல்; • தூக்கும் சாதனங்களின் மூலம் சுமையை இணைத்து இயக்குதல்; • சுமையைப் பாதுகாப்பாகக் கையாளுதல்; • சிறிய சீரமைப்புகள் மற்றும் திருத்தங்களை மேற்கொள்ளுதல்.	**3 மணி**	**100**	**40**

பதவி	*பாடம்*	*பாடத்திட்டம்*	*நேரம்*	*மொத்தப் புள்ளிகள்*	*சித்திப் புள்ளிகள்*
உலை இயக்குநர் உதவியாளர்	விடய அறிவு	செய்முறைப் பரீட்சையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடத்துறைகளில் இரண்டில் சித்தியடைந்திருக்க வேண்டும் • மூலப்பொருட்கள் மற்றும் உலோகங்களை அடையாளம் கண்டு எடையிடுதல்; உலை/ குப்போலாவை இயக்குதல்; • உலோகத்தை உருக்குதல் மற்றும் கழிவுகளை அகற்றுதல்; • ஊதிகள், எரிப்பான்கள், தூக்கும் மற்றும் ஏற்றும் உபகரணங்களை இயக்குதல்; • உலை, குப்போலா மற்றும் கரண்டியைத் தயாரித்தல் மற்றும் திருத்துதல்.	3 மணி	100	40
பொருத்துநர் (பொது) உதவியாளர்	விடய அறிவு	செய்முறைப் பரீட்சையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடத்துறைகளில் இரண்டில் சித்தியடைந்திருக்க வேண்டும் • இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் அச்சுகளின் பாகங்களைப் பிரித்தல், ஒன்றுசேர்த்தல் மற்றும் பொருத்துதல்; • இயந்திரம், டை அல்லது அச்சின் பாகங்களைத் திருத்துதல்.	3 மணி	100	40
இயந்திர இயக்குநர் (உற்பத்தி) உதவியாளர்	விடய அறிவு	செய்முறைப் பரீட்சையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடத்துறைகளில் இரண்டில் சித்தியடைந்திருக்க வேண்டும் • கொல்லர் வடிவமைப்பு இயந்திரங்கள் மற்றும் அழுத்திகளை இயக்கி பராமரித்தல்; • போல்ட் மற்றும் ஆணி வடிவமைப்பு இயந்திரங்களை இயக்கி பராமரித்தல்; • நீரழுத்த இயந்திரங்களை இயக்கி பராமரித்தல்.	3 மணி	100	40
இயந்திரப் பணியாளர் உதவியாளர்	விடய அறிவு	செய்முறைப் பரீட்சையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடத்துறைகளில் இரண்டில் சித்தியடைந்திருக்க வேண்டும் • லேத் இயந்திரப் பணி; துளையிடுதல் மற்றும் தொடர்புடைய பணிகள்; • லேத் மற்றும் துளையிடும் கருவிகளை அரைத்துக் கூர்மைப்படுத்துதல்.	3 மணி	100	40
வார்ப்பாளர் உதவியாளர்	விடய அறிவு	செய்முறைப் பரீட்சையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடத்துறைகளில் இரண்டில் சித்தியடைந்திருக்க வேண்டும் • பச்சை மணல் அல்லது உலர் கரு மணலைப் பயன்படுத்தி வார்ப்பு அச்சு தயாரித்தல்; • அச்சை வார்ப்புச் சோதனைக்கு உட்படுத்துதல்; • மணல் கலவைகளைத் தயாரித்தல்; • இரு பாக அச்சை இறுக்குதல், காற்றுத் துளையிடுதல் மற்றும் ஒன்றுசேர்த்தல்.	3 மணி	100	40

பதவி	*பாடம்*	*பாடத்திட்டம்*	*நேரம்*	*மொத்தப் புள்ளிகள்*	*சித்திப் புள்ளிகள்*
வார்ப்பு மாதிரி தயாரிப்பாளர் உதவியாளர்	விடய அறிவு	செய்முறைப் பரீட்சையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடத்துறைகளில் இரண்டில் சித்தியடைந்திருக்க வேண்டும் • வழங்கப்பட்ட வரைபடத்திற்கமைய கரு அச்சுப்பதிவுகளைப் பயன்படுத்தி வார்ப்பு மாதிரி தயாரித்தல்; • T மோர்டிஸ் மற்றும் டெனன் இணைப்பைத் தயாரித்தல்.	3 மணி	100	40
குளிரூட்டல் மற்றும் வளிச்சீராக்கல் தொழில்நுட்ப உதவியாளர்	விடய அறிவு	செய்முறைப் பரீட்சையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடத்துறைகளில் இரண்டில் சித்தியடைந்திருக்க வேண்டும் • குளிரூட்டல் மற்றும் வளிச்சீராக்கல் அமைப்பை நிறுவுவதற்கான மதிப்பீடு தயாரித்தல்; • சாளர மற்றும் பிரிக்கப்பட்ட வகை வளிச்சீராக்கிகளை நிறுவுதல்; • குளிர்சாதனப் பெட்டி, நீர்குளிரூட்டி, காட்சியகக் குளிரூட்டி, போத்தல் குளிரூட்டி மற்றும் ஆழ் குளிரூட்டிகளைத் திருத்துதல்; • வளிச்சீராக்கிகளைத் திருத்துதல்.	3 மணி	100	40
கருவி மற்றும் அச்சு தயாரிப்பாளர் உதவியாளர்	விடய அறிவு	செய்முறைப் பரீட்சையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடத்துறைகளில் இரண்டில் சித்தியடைந்திருக்க வேண்டும் • CNC மில்லிங் இயந்திரத்தை இயக்குதல்; • கருவி மற்றும் அச்சுத் தயாரிப்பிற்கான உலோகங்களை அடையாளம் காணுதல்; • மெருகூட்டுதல்; • கருவிகள் மற்றும் டைகளைத் தயாரித்தல்.	3 மணி	100	40
தச்சர் (கட்டிடங்கள்) உதவியாளர்	விடய அறிவு	செய்முறைப் பரீட்சையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடத்துறைகளில் இரண்டில் சித்தியடைந்திருக்க வேண்டும் • வரைபடத்திற்கமைய கூரை அமைப்பதற்குரிய மரத்தை அடையாளம் காணுதல்; • படிக்கட்டு நிர்மாணம்; • தரையமைப்பு மற்றும் சாளரத் தயாரிப்பு.	3 மணி	100	40
தச்சர் (தளபாடங்கள்) உதவியாளர்	விடய அறிவு	செய்முறைப் பரீட்சையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடத்துறைகளில் இரண்டில் சித்தியடைந்திருக்க வேண்டும் • தளபாடத் தயாரிப்பிற்கான மதிப்பீடு வழங்குதல்; • செயற்கை மூலப்பொருட்களைக் கொண்டு தளபாடங்கள் தயாரித்தல்; • மரம் மற்றும் மரப்பலகைகளைக் கொண்டு தளபாடங்கள் தயாரித்தல்; • இயந்திரங்கள், கருவிகள் மற்றும் மின்கருவிகளைப் பராமரித்தல்.	3 மணி	100	40

பதவி	*பாடம்*	*பாடத்திட்டம்*	*நேரம்*	*மொத்தப் புள்ளிகள்*	*சித்திப் புள்ளிகள்*
வாகனக் கூரை மற்றும் மெத்தைப்பணி உதவியாளர்	விடய அறிவு	செய்முறைப் பரீட்சையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடத்துறைகளில் இரண்டில் சித்தியடைந்திருக்க வேண்டும் • தையல் இயந்திரத்தை இயக்குதல் மற்றும் கையால் தைத்தல்; • வாகன இருக்கை மெத்தை மற்றும் பக்கச் சாளர உறைகளுக்கான பொருட்களைக் குறியிட்டு வெட்டுதல்; • கேன்வாஸ் மூலம் வாகனக் கூரை மற்றும் பக்கச் சாளரப் பகுதிகளைத் தயாரித்தல் அல்லது ஒட்டுத் திருத்தப் பணிகளை மேற்கொள்ளுதல்.	3 மணி	100	40
குழாய் பொருத்துநர் உதவியாளர்	விடய அறிவு	செய்முறைப் பரீட்சையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடத்துறைகளில் இரண்டில் சித்தியடைந்திருக்க வேண்டும் • சூடான மற்றும் குளிர்ந்த நீர் வழங்கல் குழாய்களை நிறுவுதல் மற்றும் பராமரித்தல். • கழிவுநீர் மற்றும் மலக்கழிவு அமைப்புக்களை நிறுவுதல் மற்றும் பராமரித்தல். • எரிவாயு குழாய் அமைப்புகள்; • பம்புகளை நிறுவுதல் மற்றும் பராமரித்தல். • உயர் அழுத்தக் குழாய்களை நிறுவுதல் மற்றும் பராமரித்தல்.	3 மணி	100	40

குறிப்பு - பதவிக்குரிய அனுபவம் ஏற்றுக்கொள்ளத்தக்க சான்றிதழ்களால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அத்தகைமைகள் விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியான 2026.11.06 அன்று செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

11.0 அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 01/2020 இன் ஏற்பாடுகளுக்கமைய விண்ணப்பதாரர் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்பட்டிருக்கக் கூடாது.

12.0 விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும்போது மிகவும் கவனமாகச் சரியான தகவல்களை வழங்க வேண்டும். தகைமைகள் பரிசீலிக்கப்படும் போது விண்ணப்பதாரர் தகுதியற்றவர் எனத் தெரியவந்தால் எந்த நிலையிலும் அவரது விண்ணப்ப நிலை இரத்துச் செய்யப்படலாம். (விண்ணப்பதாரர் வழங்கிய தகவல் எப்போதாவது பொய்யானது எனத் தெரியவந்தால் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படலாம்.)

13.0 விண்ணப்பம் குறித்த மாதிரிப் படிவத்திற்கமைய சமர்ப்பிக்கப்பட வேண்டும். அறிவித்தலில் உள்ள மாதிரி விண்ணப்பத்துடன் ஒத்துவராத மற்றும் பூர்த்தியற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

14.0 விண்ணப்பதாரரின் கையொப்பம் அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்திய ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரம் பெற்ற அலுவலர், பொலிஸ் சேவையில் வர்த்தமானிப்படுத்தப்பட்ட பதவியொன்றை வகிக்கும் அலுவலர் அல்லது அரச சேவையில் நிரந்தரப் பதவியொன்றை வகிக்கும் பதவிநிலை அலுவலர் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

15.0 இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைக் கொண்டவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளனர் என்ற அனுமானத்தின் அடிப்படையில், குறித்த திகதியன்று அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த அனைவரும் அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் தொழில்முறைச் செய்முறைப் பரீட்சைக்கும் பொதுவான நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படுவர். அவ்வாறு அழைக்கப்படுவது, விண்ணப்பதாரர் இப்பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக்கொண்டதாகக் கருதப்படாது. நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தகைமைகள் பரிசீலிக்கப்படும் போது தேவையான தகைமைகள் இல்லை எனத் தெரியவந்தால் அவரின் விண்ணப்ப நிலை இரத்துச் செய்யப்படும்.

16.0 விண்ணப்பதாரரின் அடையாளத்தை உறுதிப்படுத்தப் பின்வரும் ஆவணங்களில் ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும்:

I. ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை

II. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்
III. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு

17.0 இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அது தொடர்பாகப் பணிப்பாளர் நாயகம் தீர்மானிப்பார். அனைத்து விண்ணப்பதாரர்களும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டவர்களாவர்.

18.0 விண்ணப்பிக்கும் முறை:

அனைத்து விபரங்களையும் உள்ளடக்கி இதனுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமைய பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம், கல்வித் தகைமைகள், தொழிற் தகைமைகள் மற்றும் சேவை அனுபவத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் பிரதிகளுடன், 06.11.2026 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு "பணிப்பாளர் நாயகம், அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களம், கொலொன்னாவை வீதி, கொலொன்னாவை" என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் இடப்படும் உறையின் இடது மேல் மூலையில் "ஆரம்ப நிலை அரைத் தேர்ச்சியுடைய சேவை வகுதியின் தரம் III இற்கான திறந்த ஆட்சேர்ப்பு - 2026" எனத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

பொறி. எஸ். என். பி. எம். பத்மசிறி,
பணிப்பாளர் நாயகம்.

அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களம்,
கொலொன்னாவை வீதி,
கொலொன்னாவை,
2026, ஒற்றோபர் 09.

மாதிரி விண்ணப்பப்படிவம்

அலுவலகப் பயன்பாட்டிற்கு மட்டும்

அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தின் ஆரம்பநிலை அரைத்தேர்ச்சியுடைய சேவை வகுதியின் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு - 2026
Recruitment to the posts in the Primary Semi Skilled Service Category of the Department of Government Factory – 2026

விண்ணப்பிக்கும் மொழி மூலம்:
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(பொருத்தமான இலக்கத்தை கட்டத்திற்குள் எழுதவும்)

பதவிக்குரிய தொடர் இலக்கம்

விண்ணப்பிக்கும் பதவி :- .....
(ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனி விண்ணப்பப் படிவம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.)

1. (அ) முழுப் பெயர் (ஆங்கிலப் பெரிய எழுத்துகளில்):

.....
(உதா: HERATH MUDIYANSELAGE SAMAN RATHNAYAKA)

(ஆ) முதலெழுத்துகளுடன் பெயர் (ஆங்கிலப் பெரிய எழுத்துகளில்):

.....
(உதா: H. M. S. RATHNAYAKA)

(இ) முழுப் பெயர் (தமிழில்): .....

2. (அ) நிரந்தர முகவரி (சிங்களத்தில் / தமிழில்):
.....
(ஆ) அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கிலப் பெரிய எழுத்துக்களில்):
.....
.....
(இ) அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி (சிங்களத்தில் / தமிழில்):
.....
.....

3. தேசிய அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

4. பால் : பெண் - 0 ஆண் - 1 | |

(பொருத்தமான இலக்கத்தை கட்டத்திற்குள் எழுதவும்)

5. பிறந்த திகதி : ஆண்டு: | | | | | மாதம்: | | | திகதி: | |

6. விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதியன்று வயது : வருடங்கள் : | | மாதங்கள் : | | நாட்கள்: | |

7. தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |

8. கல்வித் தகைமைகள்: (பொருத்தமான சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்)

8.1 க.பொ.த. (சாதாரண தர) பரீட்சை விபரங்கள்

I. முதல் தடவை பெறுபேறுகள்
பரீட்சைச் சுட்டெண்: .....
வருடம் ..... மாதம் .....

பாடம்	*தரம்*	*பாடம்*	*தரம்*
1.		6.	
2.		7.	
3.		8.	
4.		9.	
5.		10.	

II. இரண்டாம் தடவை பெறுபேறுகள்
பரீட்சைச் சுட்டெண்: .....
வருடம் ..... மாதம் .....

பாடம்	*தரம்*	*பாடம்*	*தரம்*
1.		6.	
2.		7.	
3.		8.	
4.		9.	
5.		10.	

8.2 **க.பொ.த. (உயர்தர) பரீட்சை விபரங்கள்**

I. பரீட்சை நடைபெற்ற வருடமும் மாதமும் : .....
II. பரீட்சைச் சுட்டெண் : .....

பெறுபேறுகள்

பாடம்	*தரம்*
1.	
2.	
3.	
4.	

9. **மேலதிக கல்வித் தகைமைகள்: (பொருத்தமான சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்.)**

தொடர் இலக்கம்	*நிறுவனம்*	*பாடநெறியின் பெயர்*	*கால எல்லை*	*சான்றிதழின் செல்லுபடித் திகதி*

10. தொழிற்தகைமைகள்: (பொருத்தமான சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்.)

தொடர் இலக்கம்	*நிறுவனம்*	*பாடநெறியின் பெயர்*	*NVQ மட்டம்*	*கால எல்லை*	*சான்றிதழின் செல்லுபடித் திகதி*

11. **பதவிக்குரியதாகப் பெற்றுள்ள சேவை அனுபவம்:**

தொடர் இலக்கம்	*சேவைக் காலம்*		*பதவி*	*பணியிடம்*
	முதல்	*வரை*		

12. **இணைப்பாடவிதான செயற்பாடுகள்**: .....
.....
.....
.....
.....

13. **தற்போது ஏதேனும் அரச நிறுவனத்தில் பதவி வகித்தால் அதன் விபரங்கள்:**

I. பதவியும் தரமும் : .....
II. நியமனத் திகதி : .....
III. நிறுவனம் :.....
IV. ஓய்வூதிய உரிமையுள்ள நிரந்தர பதவியா :.....

14. நீங்கள் எப்போதாவது ஏதேனும் குற்றச்சாட்டில் நீதிமன்றத்தால் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீர்களா?
(பொருத்தமான கட்டத்தில் √ குறியிடவும்.)
ஆம் எனில் விபரங்களைக் குறிப்பிடவும்.

ஆம் ☐ இல்லை ☐

.....
.....
.....

15. விண்ணப்பதாரரின் உறுதிமொழி

(அ) இந்த விண்ணப்பத்தில் நான் வழங்கியுள்ள தகவல்கள் எனது அறிவிற்கு எட்டியவரை உண்மையானவை மற்றும் சரியானவை என மரியாதையுடன் உறுதிப்படுத்துகிறேன். இதன் ஏதேனும் பகுதியை நிரப்பாமையால் மற்றும்/அல்லது தவறாக நிரப்பியதால் ஏற்படக்கூடிய இழப்பை ஏற்றுக்கொள்கிறேன். மேலும், அனைத்து பகுதிகளும் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன எனவும் அறிவிக்கிறேன்.

(ஆ) நான் வழங்கிய இந்த உறுதிமொழி பொய்யானது என நிரூபிக்கப்பட்டால், நியமனத்திற்கு முன் தகுதியற்றவராவேன் என்றும் நியமனத்தின் பின்னர் சேவையிலிருந்து நீக்கப்படலாம் என்றும் அறிவேன்.

(இ) இங்கு குறிப்பிடப்பட்ட எந்தத் தகவலையும் பின்னர் மாற்றமாட்டேன்.

(ஈ) கல்வி மற்றும் தொழிற்தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்துச் சமர்ப்பிக்கிறேன்.

திகதி: ....
விண்ணப்பதாரரின் கையொப்பம்

16. விண்ணப்பதாரரின் கையொப்பத்தைச் சான்றுப்படுத்தல்: (பொருத்தமற்ற சொற்களை நீக்கவும்)

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ..... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் ..... ஆம் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் சான்றுப்படுத்துகிறேன்.

திகதி: ....
சான்றுப்படுத்துபவரின் கையொப்பம்

சான்றுப்படுத்துபவரின் பெயர் : .....
பதவி : .....
முகவரி : .....
உத்தியோகபூர்வ முத்திரை : .....

குறிப்பு - விண்ணப்பம் வர்த்தமானி அறிவித்தலின் 14 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

17. அரச சேவை / மாகாண அரசாங்க சேவையில் பணிபுரிபவராக இருப்பின், நிறுவனத் தலைவரின் சான்றிதழ்:

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ..... என்பவர் இவ்வமைச்சு/திணைக்களம்/கூட்டுத்தாபனம்/சபையில் பணிபுரிகிறார். அவர் மேற்படி பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் இந்நிறுவனச் சேவையிலிருந்து விடுவிக்க முடியும் / முடியாது என்பதைத் தெரிவிக்கிறேன்.

.....
நிறுவனத் தலைவரின் கையொப்பம்

நிறுவனத் தலைவரின் பெயர் : .....
பதவி : .....
பணியிட முகவரி : .....
உத்தியோகபூர்வ முத்திரை : .....

10 - 489

பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

ஹோமியோபதி மருத்துவ சபை

மருத்துவ விநியோகிப்பாளர்கள் (Pharmaceutical dispenser) NVQ பாட நெறிக்காக விண்ணப்பங்களைக் கோரல் - 2026

ஹோமியோபதி மருத்துவ சபையில் பதிவு செய்யப்பட்ட மருந்துவ விநியோகிப்பாளர்கள் (Registered Pharmeceutical dispenser) பதவிக்குத் தேவையான தேசிய தொழிற்கல்வித் தகைமை (NVQ) பாடநெறியினை மேற்கொள்வதற்காகத் தகைமையுடைய விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அடிப்படைத் தகைமைகள்

கல்வித் தகைமைகள் க. கொ. த (சாதாரண தர) பரீட்சையில் குறைந்தபட்சம் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

-
- வயது எல்லை, விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் முடிவுத் திகதியில் 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது எல்லை கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது).

ஏனைய தகைமைகள்

- இலங்கைப் பிரஜையாக இருந்தல் வேண்டும்
- நாட்டின் எந்தப் பகுதியிலும் சேவை ஆற்றுவதற்கு உடலளவிலும் மனதளவிலும் தகுதியுடையவராராக இருத்தல் வேண்டும்.
- நற்பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

பாடநெறிக் கட்டணம்

- ரூபா. 25,000.00

பணம் செலுத்துதல் மற்றும் விண்ணப்பிக்கும் முறைகள்

பாடநெறிக்கட்டணமான ரூபா 25,000.00 வை கீழே குறிப்பிடப்பட்டுள்ள வங்கி கணக்கில் வைப்பு செய்து, அதன் பற்றுச்சீட்டினை (காரணத்தைக் குறிப்பிட்டு) 2026 அக்டோபர் 31 ஆம் திகதிக்கு முன்னர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் அமைந்துள்ள ஹோமியோபதி மருத்துவ சபைக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும். கீழே தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய

தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவமும் இத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

- கணக்கின் பெயர்: Homoeopathic Fund
- கணக்கு இலக்கம்: 0002026466
- வங்கி மற்றும் கிளை: இலங்கை வங்கி (BOC) , தப்ரபேன் கிளை (Taprobane Branch)

பதிவாளர் (பதில்), ஹோமியோபதி மருத்துவ சபை, இல. 94, ஷெல்டன் ஜயசிங்க மாவத்தை, வெலிசர, றாகம.

மாதிரி விண்ணப்பப் படிவம்

ஹோமியோபதி மருத்துவ சபை
மருத்துவ விநியோகிப்பாளர்கள் NVQ பாட நெறிக்கான
விண்ணப்பப் படிவம் - 2026

1. முழுப் பெயர் (சிங்களத்தில்) :

   .....
   (ஆங்கில கெபிட்டல் எழுத்துக்களில்) .....
   ...

2. நிரந்தர முகவரி:

   .....
   .....

3. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

   .....

4. தொலைபேசி இலக்கம் :

   .....

5. பிறந்த திகதி : .....

   31.10.2026 இல் வயது: வருடங்கள்: ..... மாதங்கள்: .....நாட்கள்: .....

6. மாவட்டம் :

7. கல்வித் தகைமைகள் (க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள்) :

   பரீட்சை ஆண்டு : ..... சுட்டெண் : .....

பாடம்	பெறுபேறுகள்
1.	.....
2.	.....
3.	.....
4.	.....
5.	.....
6.	.....
7.	.....
8.	.....
9.	.....

8. செலுத்தப்பட்ட பாடநெறிக்கான கட்டண விபரம் :

- தொகை ரூபா. 25,000.00
- வைப்புச் செய்த திகதி : .....
- வங்கி கிளை: .....

(விண்ணப்பப் படிவத்துடன் கட்டாயமாக இணைப்பட வேண்டும்)

விண்ணப்பதாரரின் உறுதிப்படுத்தல்

மேலே குறிப்பிடப்படடுள்ள தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என்றும், இப் பாடநெறிக்கான தகைமைகளை நான் பூர்த்தி செய்துள்ளேன் என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். ஏதேனும் தகவல்கள் தவறானது என கண்டறியப்பட்டால், என்னை இப் பாடநெறியில் இருந்து நீக்குவதற்கு உடன்படுகின்றேன்.

....
திகதி விண்ணப்பதாரரின் கையொப்பம்

10 - 443

இலங்கை மதுவரித் திணைக்களம்
மதுவரிக் காவலாளர் சாரதி பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2026

01. இலங்கை மதுவரித் திணைக்களத்தின் 'மதுவரிக் காவலாளர் சாரதிப் பதவிக்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு, பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்த இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. கீழே தரப்பட்டுள்ள மாதிரிக்கு அமையத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள், "மதுவரி ஆணையாளர் நாயகம், இலங்கை மதுவரித் திணைக்களம், இல. 353, கோட்டே வீதி, ராஜகிரிய" என்ற முகவரிக்கு 2026.10.30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். கடித உறையின் இடது மேல் மூலையில் "Excise Guard Driver" (மதுவரிக் காவலாளர் சாரதி) எனக் குறிப்பிடப்பட வேண்டும். முழுமையற்ற விண்ணப்பங்களும், இறுதித் திகதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் பெறப்பட்டமை குறித்து அறிவிக்கப்படமாட்டாது.

பரீட்சைக் கட்டணம் ரூ. 600/= ஆகும். அக்கட்டணத்தை மதுவரி ஆணையாளர் நாயகத்தின் பெயரில் இலங்கை வங்கியின் தப்ரபேன் கிளையில் திறக்கப்பட்டிருக்கும் 7041628 இனும் இலக்கத்திற்கு வரவு வைக்கப்பட்டு, அப்பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை உங்களது விண்ணப்பத்தின் உரிய பகுதியில் ஒட்டவும்.

03. மாதாந்த சம்பள அளவுத் திட்டம்: ரூ. 49,550 - 7x540 - 27x670 - 71,420/-. மாதாந்த சம்பளம் ரூ. 49,550.00 என்ற நிலையில் நிர்ணயிக்கப்படும். அ.நி.சு..10/2025 இற்கு அமைய Rs.01-2025 (PC) மேற் குறிப்பிட்ட சம்பள முறையின் ரூ.50,630.00 சம்பள நிலையைத் தாண்டுவதற்கு முன்னதாக முதலாவது வினைத்திறன் தடைகாண் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்

04. வயதெல்லை: - விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் தினத்தன்று 22 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

05. இப்பதவிக்கான ஆட்சேர்ப்பு தொடர்பான அனைத்துத் தகைமைகளும், விண்ணப்ப அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள இறுதித் திகதியளவில் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(I) கல்வித் தகைமைகள்:-

சகல விண்ணப்பதாரர்களும் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் கணிதம் உட்பட ஐந்து (05) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்; இதில் சிங்களம்/ தமிழ் மற்றும் வேறொரு பாடத்தில் திறமைச் (C) சித்தியைப் பெற்றிருக்க வேண்டும். அத்துடன், ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருப்பதோடு, மொத்தமாக இரண்டு தடவைகளுக்கு மேற்படாத முயற்சிகளில் இத்தேர்ச்சியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(II) தொழில்சார் தகைமை:-

சகல விண்ணப்பதாரர்களும்,

a. நெடுஞ்சாலை விதிமுறைகள் குறித்த தெளிவான அறிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
b. வாகனப் பொறியியல் (Motor Mechanics) குறித்த அடிப்படை அறிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
c. மோட்டார் பஸ்கள், மோட்டார் கோச்சுகள் மற்றும் 'A' வகுப்பு வாகனங்களை ஓட்டுவதற்கு, மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

(III) வேலை அனுபவம்:-

விண்ணப்பதாரர், இயைபுடைய வகையிலான சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்ற பின்னர், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் சாரதியாக 03 ஆண்டுகள் பணி அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

(IV) உடல்சார் தகைமைகள்
சகல விண்ணப்பதாரர்களும்

i. குறைந்தபட்ச உயரம் 5 அடி 4 அங்குலமாக இருத்தல் வேண்டும்.
ii. மூச்சை வெளியேற்றும் நிலையில் மார்பளவு குறைந்தபட்சம் 32 அங்குலமாக இருத்தல் வேண்டும்.
iii. மூக்குக் கண்ணாடி அல்லது கண்ணாடி வில்லைகள் (contact lenses) இல்லாமலேயே, பொருட்களை அடையாளம் காணும் திறன் உட்பட, குறைந்தபட்சம் 6/6 மற்றும் 6/12 என்ற அளவிலான கண்பார்வைத் திறன் இருக்க வேண்டும்.
iv. நாட்டின் எப்பாகத்திலும் பணிபுரியும் வகையில் உடல் மற்றும் மனதளவில் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

(V) ஏனைய தகைமைகள்
விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசை ஒருவராக இருக்க வேண்டியதுடன், சிறந்த நன்னடத்தை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

06. ஆட்சேர்ப்பு முறை:

(i) அரச வர்த்தமானி, பரந்தளவில் விநியோகிக்கப்படும் செய்திப்பத்திரிகை மற்றும் உத்தியோக பூர்வ இணையதளம் ஆகியவற்றில் அறிவித்தல் ஒன்றை வெளியிடுவதன் மூலம் விண்ணப்பங்கள் கோரப்படும். தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் எழுத்துப் பரீட்சை மற்றும் தொழில்சார் பரீட்சை ஆகியவற்றில் பங்கேற்க வேண்டும். இப்பரீட்சைகள் சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் நடத்தப்படும். விண்ணப்பிக்கும்போது தெரிவு செய்யப்பட்ட மொழி மூலத்தை, பின்னர் மாற்றிக்கொள்ள விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அளிக்கப்படமாட்டாது.

(ii) எழுத்துப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர்களில், வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் போல இரு மடங்கு எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் உடல் தகுதித் தேர்வு மற்றும் பிரயோக சாரதிப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். மதுவரிக் காவலாளர் சாரதிப் பதவிக்குத் தெரிவு செய்யப்படுபவர்கள், எழுத்துப் பரீட்சை மற்றும் மேற்கூறப்பட்ட பரீட்சைகளில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் தகைமை வரிசைப்படி தெரிவு செய்யப்படுவார்கள்.

(iii) எழுத்துப் பரீட்சை:

விடயம்	காலப்பகுதி	மொத்த புள்ளிகள்	சித்திப் புள்ளிகள்
I. நெடுஞ்சாலை விதிகள் மற்றும் மோட்டார் எந்திரவியல்	03 மணித்தியாலம்	100	40%
II. பொதுப் பரீட்சை	01 மணி 30 நிமிடங்கள்	100	40%

பரீட்சைக்கான பாடத்திட்டம்

வினாத்தாள்	பாடத்திட்டம்
I. நெடுஞ்சாலை விதிகள் மற்றும் மோட்டார் இயந்திரவியல்	நெடுஞ்சாலை விதிகள், இயந்திரவியல் துறை மற்றும் அத்துறை சார்ந்த குறைபாடுகள் குறித்த அடிப்படை அறிவு ஆகியவற்றைப் பரிசோதிப்பதற்கான வினாத்தாள்.
II. பொதுப் பரீட்சை	இது விண்ணப்பதாரர்களின் பொது அறிவைப் பரிசோதிப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட ஒரு பொது வினாத்தாள் ஆகும்.

நடத்தும் அதிகாரபீடம்: நியமன அதிகார பீடம்பு அல்லது நியமன அதிகார பீடத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனம்.

(iv) தொழில்சார் பரீட்சை: இது விண்ணப்பதாரரின் வாகனம் ஓட்டும் திறனை அளவிடுவதற்கான ஒரு செயல்முறைப் பரீட்சையாகும்.

	மொத்த புள்ளிகள்	சித்திப் புள்ளிகள்
வாகனம் ஓட்டும் திறன்	40	40%

நடத்தும் அதிகாரம்: இத்தொழில்சார் பரீட்சையானது, மதுவரி ஆணையாளர் நாயகத்தின் அறிவுறுத்தல்களின்படியும், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் மோட்டார் வாகனப் பரிசோதகர், பொலிஸ் சேவையைச் சேர்ந்த ஓர் அலுவலர் மற்றும் அத்திணைக்களத்தைச் சேர்ந்த ஓர் அலுவலர் ஆகியோரைக் கொண்ட குழுவொன்றின் மேற்பார்வையின் கீழும் நடாத்தப்படும்.

(v) உடற் தகுதிப் பரீட்சை: ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரிவு 7.2.2.4 இன் படி, தொடர்புடைய தகைமைகளைச் சோதிக்கும் பொருட்டு.

(vi) பொது நேர்முகப் பரீட்சை:

எய்தப்பெற வேண்டிய நோக்கங்கள்:

- மதுவரிக் காவலாளர் சாரதிப் பதவியின் நியமனத்திற்கான சகல அமிசங்களிலும் விண்ணப்பதாரி பொருத்தமானவரா என்பதை மதிப்பிடுதல்
- உரிய சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களை ஆய்வு செய்வதன் மூலம், விண்ணப்பதாரர் தேவையான அடிப்படைத் தகைமைகளைக் கொண்டுள்ளாரா என்பதைச் சரிபார்த்தல்.

பொது நேர்முகப் பரீட்சை சபையின் நியமன அதிகாரி: மதுவரி ஆணையாளர் நாயகம்

07. சேவை நிபந்தனைகள்: இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரியதுமாகும். ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக எதிர்காலத்தில் அரசாங்கம் எடுக்கும் கொள்கைத் தீர்மானங்களுக்கு நியமனம் பெறுபவர்கள் கட்டுப்பட்டிருப்பார்கள். மேலும், நியமனம் பெறுபவர்கள் விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்; அத்துடன், அரசாங்கம் காலத்திற்குக் காலம் நிர்ணயிக்கும் முறையில் அதற்கான பங்களிப்புத் தொகையைச் செலுத்த வேண்டும். இது இலங்கை மதுவரித் திணைக்களத்தின் சீருடைப் பணியாளர் பிரிவைச் சார்ந்த ஒரு பதவியாகும்; எனவே, நியமனம் பெறுபவர்கள் அத்திணைக்களத்தின் கட்டளைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்குக் கட்டுப்படுதல் வேண்டும்.

08. 2023.12.14 ஆம் திகதிய மற்றும் 2310/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும், தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கும் ஏற்புடையதாதல் வேண்டும்.

09. இந்நியமனம் தொடர்பான ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் குறித்து, அரசாங்க சேவை ஆணைக்குழுவுடனான கலந்தாலோசனையின் பேரில் தீர்மானிக்கப்படும்.

10. நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு எழுத்துப்பூர்வமாகத் தெரிவிக்கப்படும். நேர்முகப் பரீட்சையில் பங்குபற்றுவதற்காக ஏற்படும் பயணச் செலவுகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

எம்.பி.என்.ஏ. பேமரத்ன,
மதுவரி ஆணையாளர் நாயகம்.

திகதி- 30.09.2026

மாதிரி விண்ணப்பப்படிவம்

இலங்கை மதுவரித் திணைக்களத்தின் மதுவரிக் காவலாளர் சாரதிப் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

01. (a) முழுப்பெயர் (தாய் மொழியில்):.....
.....
(b) முழுப்பெயர் (ஆங்கிலத்தில்) : .....
(ஆங்கிலக்கெப்பிட்டல் எழுத்தில்).....
(c) முதலெழுத்துகளுடன் பெயர்: .....
.....

02. தேசிய அடையாள அட்டை இல:

03. செல்லிடத் தொலைபேசி இல.

04. தற்போதைய முகவரி: .....
.....
(அ) நிரந்தர முகவரி: .....
.....
(ஆ) பொலிஸ் நிலையம்: .....

05. நீங்கள் இலங்கைப் பிரசையானது, வம்சாவளி மூலமாகவா அல்லது பதிவு மூலமாகவா என்பது, (பதிவு மூலமாக இருப்பின், அச்சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

06. விவாக அந்தஸ்து: .....

07. பிறந்த திகதி:
ஆண்டு: ..... மாதம்: ..... திகதி: .....

08. வர்த்தமானி அறிவித்தலின்படி, விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான இறுதித் தினத்தன்று வயது:-
வருடங்கள்: ..... மாதங்கள்: ..... நாட்கள்: .....
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

09. கல்வித் தகைமைகள்

சுட்டெண்: ..... வருடம்: .....

பாடம்	சித்தி

10. மார்பின் அளவு (சுவாசம் உள்ளிழுக்காமல்) செ.மீ: ..... அங்குலம்: .....

11. உயரம்: செ.மீ: ..... அடி: ..... அங்குலம்: .....

12. எழுத்துப் பரீட்சை மற்றும் தொழில்சார் பரீட்சைக்காக நீங்கள் தெரிவு செய்யும் மொழி மூலம்:

சிங்களம் : ☐ தமிழ் : ☐

13. இரு நற்சான்றளிப்பவர்களின் பெயர்கள், பதவிகள் மற்றும் முகவரிகள்
(i) .....
.....
(ii) .....
.....

14. ஏதேனும் அரச/ மாகாண அரச பதவி ஒன்றை இதற்கு முன் வகித்திருந்தால், அது குறித்த விபரங்கள்,
நீங்கள் அப்பதவியிலிருந்து விலகியிருப்பின், அதற்கான காரணங்களைக் குறிப்பிடவும். .....
.....

15. தற்போதைய பதவிப்பெயரும் சேவை நிலையமும்:- .....
.....

இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் இத்தால் உறுதியளிக்கிறேன். இதில் வழங்கப்பட்ட ஏதேனும் தகவல், பரீட்சைக்கு முன்னர் தவறானது அல்லது பொய்யானது எனக் கண்டறியப்பட்டால், அது எனது தகைமையிழப்புக்கு வழிவகுக்கலாம் என்பதையும், நியமனத்திற்குப் பின் கண்டறியப்பட்டால், இழப்பீடு ஏதுமின்றி எனது பணி நீக்கத்திற்கு வழிவகுக்கலாம் என்பதையும் நான் அறிவேன்.

.....

திகதி :- ..... விண்ணப்பதாரியின் கையொப்பம்

மாதிரி விண்ணப்பப்படிவம்

இலங்கை மதுவரித் திணைக்களத்தின் மதுவரிக் காவலாளர் சாரதிப் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 1
தமிழ் - 2 ☐

01. (i) முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில் : .....
(ii) முழுப்பெயர் (ஆங்கிலக் கெப்பிட்டல் எழுத்தில்): .....
(iii) முதலெழுத்துகளுடன் பெயர்:.....
(ஆங்கிலக் கெப்பிட்டல் எழுத்தில்)

02. (i) நிரந்தர முகவரி :- (ஆங்கிலக் கெப்பிட்டல் எழுத்தில்) .....
(ii) பிரதேச செயலகப் பிரிவு: .....

(iii) கிராம உத்தியோகத்தர் பிரிவு: .....
(iv) தபால் முகவரி :.....
(பரீட்சை அனுமதி அட்டை அனுப்புவதற்கு)

03. ஆண் பெண் பிரிவு :

ஆண் - 0
பெண் - 1 ☐

04. தேசிய அடையாள அட்டை இல.:

05. செல்லிடத் தொலைபேசி இல.:

06. பிறந்த திகதி: ஆண்டு: ..... மாதம்: ..... திகதி: .....

விண்ணப்ப இறுதித் தினத்தன்று வயது : வருடங்கள் ..... மாதங்கள்: ..... நாட்கள்: .....

07. நீங்கள் இலங்கைப் பிரசையா என்பது பற்றி .....
(வமசாவழியாகவா அல்லது பதிவு மூலமாகவா என குறிப்பிடவும்)

08. இனம் :.....

09. விவாக அந்தஸ்து : .....

10. நீங்கள் எப்போதாவது குற்றவியல் குற்றம் பொருட்டு நீதிமன்றினால் குற்றவாளியாக்கப்பட்டிருந்தால் புரிந்த குற்றம் பெற்ற தண்டனை பற்றிய விபரம்.
.....

11. பரீட்சை அறிவித்தலின் இல. 1 இன் கீழ் தகைமைகளைப் பெற்ற திகதி : .....

12. பரீட்சைக் கட்டண விபரங்கள் :
I. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட வங்கிக் கிளை : .....
II. பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் : .....
III. செலுத்தப்பட்ட தொகை : .....

பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும்

13. **விண்ணப்பதாரியின் சான்றுரை**

இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் இத்தால் உறுதியளிக்கிறேன். இதில் வழங்கப்பட்ட ஏதேனும் தகவல், பரீட்சைக்கு முன்னர் தவறானது அல்லது பொய்யானது எனக் கண்டறியப்பட்டால், அது எனது தகைமையிழப்புக்கு வழிவகுக்கலாம் என்பதையும், நியமனத்திற்குப் பின் கண்டறியப்பட்டால், இழப்பீடு ஏதுமின்றி எனது பணி நீக்கத்திற்கு வழிவகுக்கலாம் என்பதையும் நான் அறிவேன். உரிய பரீட்சைக் கட்டணம் உரியவாறு செலுத்தப்பட்டுள்ளது என்றும் வெளிப்படுத்துகிறேன்.

.....

திகதி :- ..... விண்ணப்பதாரியின் கையொப்பம்

10 - 445

திருத்தம்

இலங்கைப் புகையிரத திணைக்களம்

இலங்கைப் புகையிரத திணைக்களத்தில் புகையிரத பாதுகாப்பு சேவையில் புகையிரத காவலாளர் (ஆண்/பெண்) - III ஆம் தரம் தொடர்பில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த எழுத்துப் போட்டிப் பரீட்சை - 2026

மேற்கூறப்பட்ட விடயம் தொடர்பில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 2504 மற்றும் 2026.08.28 ஆம் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில்,

- 34 பந்தியினை பின்வருமாறு திருத்தியமைக்கின்றேன்.

  "அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 18/2020 இன் ஏற்பாடுகளுக்கமைய அரசாங்க சேவைக்கு இணைந்த மொழி மூலத்திற்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழி தொடர்பில் தேர்ச்சியினை பெற்றுக்கொள்ள வேண்டும்".

- 05(இ) பந்தியினை பின்வருமாறு திருத்தியமைக்கின்றேன்.

  "2026.08.28 ஆம் திகதிக்கு ஆகக் குறைந்த வயதெல்லை 18 வயதிற்கு குறையாமல் காணப்பட வேண்டியதுடன் ஆகக்கூடிய வயதெல்லை 28 வருடங்களை விஞ்சாதும் காணப்பட வேண்டும். (அதற்கமைய 2008.09.28 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1998.09.28 ஆந் திகதிக்கு அல்லது அதன் பின்னர் பிறந்த திகதியினைக் கொண்ட நபர்களுக்கு மாத்திரம் இது தொடர்பில் விண்ணப்பிப்பதற்கான தகைமை காணப்படுகின்றது".

இதற்கமைய விண்ணப்பத்தினை பொறுப்பேற்கும் இறுதித் திகதி 2026.10.16 வரை நீடிக்கப்பட்டுள்ளது

ஏற்கனவே விண்ணப்பங்களை முன்வைத்த விண்ணப்பதாரிகள் மீண்டும் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டிய தேவையில்லை.

மேலும் அவ் விண்ணப்ப அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் மாறாதிருப்பதை மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ரவிந்திர பத்மபிரிய
புகையிரத பொதுமுகாமையாளர்

புகையிரத/பொதுமுகாமையாளர் அலுவலகம்,
இலங்கை புகையிரத திணைக்களம்,
த பெ.355, ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10,
2026, ஒற்றோபர், 06.

10 - 521

சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

தாதியர் வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கை நெறிப்பயிற்சிக்காக விஞ்ஞானமானி (தாதியர்) பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்தல் - 2026

சுகாதார மற்றும் செகுசன ஊடக அமைச்சின் வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கைநெறிக்கு 2025, செப்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி வெளியிட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 01/2025 க்கு அமைவாக கீழே காட்டப்பட்டுள்ள 02 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பல்கலைக்கழகம் அல்லது நிறுவனத்தின் ஊடாக விஞ்ஞானமானி தாதியர் பட்டம் {B.Sc. (Nursing) Degree } பெற்ற கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்களினது பட்டம் வலுப்பெற்ற தினம் மற்றும் GPA பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட முன்னுரிமைப் பட்டியலின்படி நிலவுகின்ற வெற்றிடங்களின் பிரகாரம் ஆண்டுதோறும் பயிற்சி பெறுவதற்கு தேவைப்படும் எண்ணிக்கையில் 25% விஞ்ஞானமானி தாதியர் பட்டதாரிகளின் அடிப்படையில் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களில் இருந்து தெரிவு செய்யப்படுவர். இதற்கமைவாக தாதி வழிகாட்டல் மற்றும் பயிற்சிப் பாடநெறிக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களிடையே 1000 பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர்

2. பதவிக்கான கல்வித்தகைமைகள் :
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தில் விஞ்ஞானமானி (தாதி) பட்டம் {Bsc. (Nursing) Degree} பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

இலங்கைப் பாராளுமன்றச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் வழங்கப்பட்ட தாதியர் விஞ்ஞானமானிப் பட்டமொன்றைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்

அல்லது

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகச் சட்டத்தின் 25A பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானமானி (தாதியர்) பட்டமொன்றைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3. உடற்தகைமை மற்றும் ஏனைய தகைமைகள் -

(அ) இலங்கையின் எப்பிரதேசத்திலும் சேவை செய்வதற்கு எல்லாவிதத்திலும் உடல் ஆரோக்கியத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
(இ) விண்ணப்பதாரி சிறந்த நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.
(ஈ) ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.
(உ) 2026.11.09 ஆந் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
(ஊ) உரிய பட்டம் வலுப்பெற்ற தினம் 2026.11.09 ஆந் திகதிக்கு முன்னராக இருத்தல் வேண்டும்.
(எ) நேர்முகப்பரீட்சை நடைபெறும் திகதியன்று இலங்கை தாதியர் சபையில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

4. விண்ணப்பிக்கும் முறை.

(அ) இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தின் பிரகாரம் விண்ணப்பங்களை தயாரித்தல் வேண்டும். அதற்காக A4 அளவுத் தாளினை பயன்படுத்தல் வேண்டும். விண்ணப்பத்தில் இலக்கம் 01 தொடக்கம் 14 வரை முதல் பக்கத்திலும் 15 தொடக்கம் 17 வரை இரண்டாம் பக்கத்திலும் இலக்கம் 18 மூன்றாம் பக்கத்திலும் அமையும் வண்ணம் தயாரித்தல் வேண்டும்.

(ஆ) பட்டச் சான்றிதழ் மற்றும் GPA பெறுமதியைக் காட்டுகின்ற சான்றிதழை சுயமாகவே உண்மையென உறுதிப்படுத்திய பிரதியொன்றை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பதாரர்கள் ரூபா 1000.00 பெறுமதிக்கு இலங்கை வங்கி, தப்ரோபிறேன் கிளையின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் 7041318 ஆம் இலக்கத்தைக் கொண்ட "சுகாதார செயலாளர் பரீட்சைக்கட்டணம் அறவிடல்" எனும் கணக்கிற்கு வரவு வைத்து பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கூட்டினுள் ஒட்டவேண்டும். அக்கட்டணம் எக்காரணம் கொண்டும் மீண்டும் வழங்கப்பட மாட்டாது என்பதுடன் பிற பரீட்சைகளுக்காக மாற்றம் செய்வதற்கும் இடமளிக்கப்படமாட்டாது.

(ஈ) அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் பணிபுரியும் விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பப் படிவத்தை நிறுவனத் தலைவர் ஒப்பமிட்டு உறுதிப்படுத்தி சமர்ப்பிக்க வேண்டும். ஏனைய விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பப் படிவத்தில் ஒப்பமிட்டு, தங்கள் பிரிவின் கிராம அலுவலர் / அரச பாடசாலை அதிபர் / சமாதான நீதவான் / சத்தியப் பிரமாண ஆணையாளர் / சட்டத்தரணி / முப்படையின் ஆணை பெற்ற அலுவலர் / பௌத்த விகாரையின் விகாராதிபதி அல்லது தலைமைப் பிக்கு / பிற மத வழிபாட்டுத் தலத்தைச் சார்ந்த பொறுப்பான அந்தஸ்து வாய்ந்த மதத் தலைவர் / அரச அல்லது மாகாண அரச சேவையைச் சேர்ந்த நிரந்தர பதவிநிலை அலுவலர் ஆகியோரில் ஒருவர் உறுதிப்படுத்தி சமர்ப்பிக்க வேண்டும். ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை, ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக வைத்தியசாலை போன்ற அரசாங்கத்துடன் இணைக்கப்பட்ட வைத்தியசாலைகளில் தற்போது சேவையாற்றும் பட்டதாரிகள், தமது வைத்தியசாலைத் தலைவரின் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(உ) முறையாக பூர்த்தி செய்த விண்ணப்பத்தை கடித உறையில் இட்டு அக்கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தாதியர் வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கைநெறி பயிற்சிக்காக விஞ்ஞானமானி தாதி பட்டதாரிகளை இணைத்துக்கொள்ளல் 2026" எனவும் உரிய பட்டம் மற்றும் கல்வி ஆண்டு என்பவற்றையும் குறிப்பிட்டு பணிப்பாளர் (நிர்வாகம்) -01 சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு, இலக்கம் 106, டட்லி சேனநாயக்க மாவத்தை கொழும்பு -08 எனும் முகவரிக்கு 2026.11.09 ஆந்திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும்.

5. அரச அல்லது பகுதியளவு அரச சார்பு நிறுவனங்களில் சேவையாற்றுபவர்களின் விண்ணப்பங்கள் அவர்களின் நிறுவனத் தலைவர்களின் ஊடாக அனுப்ப வேண்டும். அவ்வாறு நிறுவனத் தலைவரின் ஊடாகச் சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் இது வெளிவாரியான ஆட்சேர்ப்பு என்பதுடன் உரிய பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்தாலும் அல்லது செய்யாது விட்டாலும் எக்காரணத்தைக் கொண்டும் தற்போது வகிக்கும் பதவிக்கு மீண்டும் செல்ல முடியாது என்பதை நினைவில் கொள்ளல் வேண்டும்

6. இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளுக்கு அமையாத பூரணப்படுத்தப்படாத மாதிரி விண்ணப்படிவத்திற்கு ஏற்புடையதாக அமையாத, அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்யாத, வங்கி பற்றுச்சீட்டு ஒட்டப்படாத மற்றும் 2026.11.09 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவு செய்யப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும் என்பதுடன், விண்ணப்பம் கிடைக்கப் பெற்றமை தொடர்பிலும் அறிவிக்கப்பட மாட்டாது.

மேற்படி தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுள் அவர்களின் பட்டம் வலுப் பெற்ற தினம் மற்றும் GPA பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட முன்னுரிமைப்பட்டியலின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்டவர்கள் மாத்திரம் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப்பரீட்சை சபையொன்றினால் பொதுவான நேர்முகப்பரீட்சையொன்று நடாத்தப்படுவதுடன் நேர்முகப்பரீட்சை சபையினால் தாதியர் சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துத் தகைமைகளும் பரிசீலிக்கப்படுவதுடன் உடற்தகைமையும் பரிசீலிக்கப்படும்.

குறிப்பு :

(அ). சேவையின் தேவைப்பாட்டுக்கு அமைவாக பயிற்சிக்கு இணைத்துக்கொள்ளும் எண்ணிக்கை மற்றும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுபவர்களின் எண்ணிக்கை என்பன சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும்.

(ஆ). நேர்முகப்பரீட்சைக்கு சமூகமளிக்கும் சகலரையும் பயிற்சிக்கு இணைத்துக் கொள்வதாக இச்சுற்றறிக்கையில் எவ்விடத்திலும் குறிப்பிடப்படவில்லை என்பதை கவனத்திற்கொள்ளவும்.

(இ). நேர்முகப்பரீட்சையின்; பின்னர் தகைமையுடையோர், தகைமை பெறாதோர் மற்றும் தெரிவு செய்யப்பட்டவர்கள் பற்றிய விபரங்கள் www.health.gov.lk எனும் சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் மாத்திரம் வெளியிடப்படும் என்பதுடன் எவருக்கும் தனிப்பட்ட ரீதியில் அறிவிக்கப்பட மாட்டாது.

8. நேர்முகப்பரீட்சையின் போது விண்ணப்பதாரிகளால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பிறப்புச்சான்றிதழ்
(ஆ) பட்டத்தின் மூலப்பிரதியுடன் GPA பெறுமதியைக் காட்டும் விரிவான பெறுபேற்றுச் சான்றிதழ் மற்றும் சுயமாகவே குறித்த ஆவணம் உண்மையென உறுதிப்படுத்திய சான்றிதழின் பிரதி.
(இ) தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது சாரதி அனுமதிப்பத்திரம்.
(ஈ) இலங்கை தாதியர் சபையில் பதிவு செய்தமை பற்றிய ஆவணம்

9. பயிற்சியளிக்கும் நடைமுறை -

-பாடநெறி	*பாடநெறியின் காலப்பகுதி*	*மொழிமூலம்*
தாதி வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு	06 மாதங்கள்	ஆங்கிலம்

(அ) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் உரிய தாதி வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கைநெறிக்கு அந்தந்த பயிற்சி பாடசாலைகளுக்கு இணைக்கப்படுவர். கற்கைநெறிகள் ஆங்கில மொழியில் கற்பிக்கப்படும்.

(ஆ பயிற்சிப் பாடசாலைகளுக்கு உள்வாங்கப்படுகின்ற பயிலுனர்கள் பயிற்சிப்பாடசாலைகளில் வலுவில் இருக்கும் விதிமுறைகளுக்கும் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சினால் அவ்வப்போது பிறப்பிக்கும் பிற கட்டளைகளுக்கும் கட்டுப்படல் வேண்டும்.

(இ). பயிற்சிக்காலத்தின் இறுதியில் நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்திபெறத் தவறும் அல்லது அவர்களின் வேலை மற்றும் நடத்தை திருப்திகரமாக இல்லாத விடத்து அல்லது தான் உள்வாங்கப்படும் பயிற்சி பாடசாலைகளில் வலுவில் இருக்கும் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட தவறும் பயிலுனர்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும், எவ்வித நட்டஈடுகளும் வழங்காது பயிற்சியிலிருந்து நீக்கப்படுவர்.

(ஈ). பயிற்சிக் காலத்தில் அரச நிருவாக சுற்றறிக்கை 10/2025 இன் ஏற்பாடுகளுக்கு அமைய மாணவ தாதியர்களுக்கு மூன்றாம் வருடத்தில் வழங்கப்படுகின்ற மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படும்.

(உ) தாதியர் பயிற்சிப்பாடசாலைக்கு பயிற்சிக்காக உள்வாங்கப்படும் போது பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்வதாகவும் அப்பயிற்சியை இடைநடுவில் கைவிடுவதில்லை எனவும் குறித்த பயிற்சியை முழுமையாக நிறைவு செய்த பின்னர் உரிய பதவிக்கு நியமனம் வழங்கப்பட்டால் குறைந்த பட்சம் ஐந்து வருடங்கள் (05) உரிய மாகாணத்திற்கு அல்லது நேரொத்த அமைச்சுக்குரிய நியமிக்கப்பட்ட மருத்துவமனையில் அல்லது சுகாதார சேவைகள் திணைக்களத்தில் சேவையாற்றுவதாகவும் சுகாதார செயலாளர் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருடன் உடன்படிக்கைக்கும், பிணைமுறிக்கும் உடன்படல் வேண்டும். குறித்த உடன்படிக்கை மற்றும் பிணைமுறி பயிற்சிக்காக பதிவு செய்யும் தினத்தன்றே கல்வி, பயிற்சி, மற்றும் ஆராய்ச்சி கிளையிடம் ஒப்படைக்க வேண்டும். பயிற்சி காலத்தின் போது பயிற்சியிலிருந்து விலகினால் அல்லது பயிற்சியை இடைநடுவில் கைவிட்டால் மேற்படி (இ) பிரிவின் பிரகாரம் பயிற்சியிலிருந்து நீக்கப்பட்டால் அல்லது நியமனம் பெற்று ஐந்து(05) வருடங்கள் உரிய மாகாண சபையின் அல்லது நேரொத்த அமைச்சின் நியமிக்கப்பட்ட மருத்துவமனைகள் அல்லது சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் உரிய பதவியில் சேவையாற்ற தவறினால் அல்லது பயிற்சிக் காலத்தில் அவருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள் அரசினால் பயிற்சிக்காக செலவிடப்பட்ட செலவுகள், மற்றும் பிணைமுறிக்குரிய தொகையை அவரினால் சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தத்தவறின் குறித்த தொகையை அறவிடுவதற்கு உடன்படிக்கையின் பிரகாரம் சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

10. சேவையில் ஈடுபடும் நியதிகள்:

அச்சந்தர்ப்பத்தில் நிலவும் வெற்றிடங்களுக்கேற்ப பயிற்சியின் இறுதியில் குறித்த பதவியில் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு / வழங்காமல் இருப்பதற்கு தீர்மானிக்கப்படும். அதன் பிரகாரம் உரிய பதவியின் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு தீர்மானித்தால் பயிலுனர்கள் தாம் பயிற்சிக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட கற்கை நெறிக்கு உரித்தான ஆட்சேர்ப்புத் திட்டத்தின் நிபந்தனைகள் மற்றும் வெற்றிடங்களுக்கு ஏற்ப 2025.03.25 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை 10/2025 இன் MT-7-2025 சம்பள வகுதிக்குரிய சம்பள அளவுத்திட்டத்தின் (ரூபா 54,920.00 - 10×800- 11×1,190- 10×1,320- 10×1,350- ரூபா 102,710.00) உப அட்டவணை iii இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 4வது படிநிலையில் வைத்து சம்பளம் வழங்குவதன் அடிப்படையில் iii ஆம் தரத்தின் தாதி உத்தியோகத்தர் பதவிக்கு நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

11. விண்ணப்பத்தை நிரப்பும் போது கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் மற்றும் விபரங்களை மிகவும் கவனமாகவும் பிழையின்றியும் உள்ளடக்குதல் வேண்டும். பயிற்சிக்காக இணைத்துக் கொள்ளும் போதும் நியமனம் பெற்ற பின்பும் மேற்படி சான்றிதழ்கள் பொய்யானவை என உறுதிப்படுத்தப்பட்டால் சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பதற்காக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படும் எனவும் வழங்கப்பட்ட நியமனம் இரத்து செய்யப்பட்டு பதவியிலிருந்து நீக்கப்படுவர் அல்லது பயிற்சியிலிருந்து நீக்கப்படுவர். மேலும் அது தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதுடன் மீண்டும் அரசாங்க சேவையில் இணைய முடியாதவாறு கறைநிரலில் அவருடைய பெயர் சேர்க்கப்படுவதுடன் பயிற்சிக் காலத்தில் இவருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள் அரசினால் செலவிட்ட செவினங்கள் மற்றும் பிணைமுறிக்குரிய தொகை அவரிடமிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

12. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் உரிய கற்கை நெறியை தொடர்வதற்கும் மற்றும் நாட்டின் எப்பாகத்திலும் சேவை புரிவதற்கும் உடல் மற்றும் உள ரீதியாக பொருத்தமானவர் என்பதை உறுதிப்படுத்துவதற்கு பயிற்சியின் முதலாம் மாதத்தினுள் மருத்தவ பரிசோதனையை மேற்கொள்ளல் வேண்டும் என்பதுடன் மருத்துவ பரிசோதனையில் பொருத்தமற்றவர் எனத் தெரியவரும் பட்சத்தில் விண்ணப்பதாரி பயிற்சியில் ஈடுபடுவதற்கு தகுதியற்றவர் என கருதப்படுவார்.

13. இப் பயிற்சிக் காலத்தினுள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அல்லது தனியார் சேவையில்; ஈடுபடுவதற்கு எந்தவித உரிமையும் இல்லை. அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக தெரியவரும் பட்சத்தில் பயிற்சியில் இருந்து நீக்கப்படுவர் அல்லது வேறு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

14. மேற்படி இணைத்துக்கொள்ளப்படும் சகலரும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு உரித்தாகும் சகல விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை ஏற்பாடுகளுக்கும், சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் விதிக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கும், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறைத்திட்ட விதிகளுக்கும், நிதி ஒழுங்குவிதிகளுக்கும், தாதியர் சேவை பிரமாணக் குறிப்புக்கும், அதில் அவ்வப்போது மேற்கொள்ளப்படுகின்ற திருத்தங்களுக்கும் மற்றும் காலத்திற்குக்காலம் வலுவில் இருக்கும் பொது ஒழுங்குவிதிகளுக்கும் கட்டுப்படல் வேண்டும்.

15. பயிற்சிக்கு இணைத்துக் கொள்ளப்படுபவர்களுக்கு பயிற்சிப் பாடசாலைகளில் தங்குமிட வசதிகள் வழங்குவதற்கு இவ் அமைச்சு கட்டுப்படவில்லை.அவ்வாறு வழங்குவதாயின் அதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட வீடு மற்றும் அறை வாடகை, நீர் மற்றும் மின்சார கட்டணங்கள் அறவிடப்படும்.

16. பயிற்சிக்கு இணைத்துக்கொள்ளல் தொடர்பான இந்த அறிவித்தல் மூலம் உள்வாங்கப்பட்ட அல்லது உள்வாங்கப்படாத ஏதேனுமோர் விடயம் தொடர்பாக சிக்கல்கள் தோன்றினால் சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதித்தீர்மானமாகும். இந்த அறிவித்தலில் சிங்களம் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஒவ்வாமை ஏற்படுமிடத்து சிங்கள மொழியே மேலோங்கி நிற்கும்.

மருத்துவ நிபுணர் அனில் ஜாசிங்க,
செயலாளர்.

சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
2026 , ஒற்றோபர் 05.

மாதிரி விண்ணப்பப்படிவம்

தாதி வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கைநெறி பயிற்சிக்காக விஞ்ஞானமானி தாதி பட்டதாரிகளை இணைத்துக் கொள்ளல். - 2026

விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர் விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தலை நன்கு வாசித்து விளங்கிக் கொள்ளவும்.

01.	முதலெழுத்துக்களுடன் இறுதியில் வரும் பெயர் (ஆங்கிலம் கெப்பிட்டல் எழுத்தில்)	
02.	முழுப் பெயர் (ஆங்கிலம் கெப்பிடல் எழுத்தில்)	
03.	முழுப் பெயர் சிங்களத்தில் /தமிழில்	
04.	தேசிய அடையாள அட்டை இலக்கம்	
05.	கைத்தொலைபேசி இலக்கம் (WhatsApp உடன்)	
06.	அஞ்சல் முகவரி	
07.	நிரந்தர முகவரி	
08.	வசிக்கும் மாவட்டம்	09.
10.	பிறந்த திகதி	ஆண்டு மாதம் நாள்
11.	2026.11.09 ஆந் திகதிக்கு வயது	ஆண்டு: மாதம்: நாள்:
12.	பெண்ணா/ஆணா (√ என குறியீட்டை இடவும்)	பெண் ஆண்
13.	நீங்கள் இலங்கைப் பிரசையா (√ என குறியீட்டை இடவும்)	ஆம் இல்லை

14.	கல்வித் தகைமைகள் -				
	சித்தியடைந்த பட்டம்	பட்டம் செல்லுபடியாகும் திகதி	தரத்தின் பொதுவான பெறுமதி(GPA)	பல்கலைக்கழகம்	கல்வியாண்டு

15.	நீங்கள் எப்போதாவது ஏதாவதொரு குற்றச்சாட்டுக்காக நீதிமன்றத்தால் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீரா? (√ என உரிய இடத்தில் குறியீட்டை இடவும்)	ஆம்		இல்லை	
	பதில் ஆம் எனின் அது பற்றிய விபரங்கள்				

16. விண்ணப்பதாரரின் உறுதியுரை

என்னால் விண்ணப்பங்கள் கோரப்பட்ட அறித்தலை நன்கு வாசித்து புரிந்துகொண்டு, அதில் குறிப்பிடப்பட்ட அனைத்து நிபந்தனைகளுக்கும் உட்பட்டு இந்த விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்துள்ளேன் என்றும், நான் வேறு எந்த முழுநேரப் பாடநெறியிலும் பங்கேற்கவில்லை என்றும், இந்த விண்ணப்பத்தில் நான் வழங்கியுள்ள தகவல்கள் எனக்குத் தெரிந்த வரையில் உண்மையெனவும் சரியானவையெனவும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

என்னால் தெரிவிக்கப்பட்டுள்ள இந்தக் கூற்று அல்லது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட எந்தத் தகவலும் பொய்யானது என உறுதிப்படுத்தப்பட்டால், பயிற்சிக்கு தகுதியற்றவனாக ஆகிவிடுவேன் என்றும், நியமிக்கப்பட்ட பின்னர் அவ்வாறு உறுதிப்படுத்தப்பட்டால் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்றும் நான் அறிவேன்.

அதேபோல் இந்த ஆட்சேர்ப்பு வெளிவாரி ஆட்சேர்ப்பு எனவும், எனக்கு சம்பந்தப்பட்ட பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்ய முடிந்தாலும் முடியாவிட்டாலும் எந்த விதத்திலும் தற்போது வகிக்கும் பதவிக்கு மீண்டும் வர முடியாது என நன்றாக புரிந்து கொண்டுள்ளேன் எனவும் தெரிவிக்கின்றேன்

ரூபா 1,000.00 செலுத்திப் பெற்றுக் கொண்ட வங்கிப் பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும்.

....

திகதி விண்ணப்பதாரரின் ஒப்பம்

17. விண்ணப்பதாரரின் ஒப்பத்தை உறுதிப்படுத்தல்.

இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி .... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும் அவர் ..... ஆந் திகதி ..... இல் எனக்கு முன்பாக அவரின் ஒப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி : ....

உறுதிப்படுத்துபவரின் ஒப்பம் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை

ஒப்பத்தை உறுதிப்படுத்துபவரின் பெயர் : .....

பதவி : .....

முகவரி : .....

18. விண்ணப்பிக்கும் அபேட்சகர் அரசாங்க சேவையில் / மாகாண அரசாங்க சேவையில் ஈடுபடும் ஒருவராக இருந்தால் திணைக்களத் தலைவரின் சான்றிதழ் (பொருந்தாத சொற்களை வெட்டி விடவும்)

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரரான திரு. / திருமதி/ செல்வி..... .....இந்தத் திணைக்களத்தில் .....பதவியை வகிக்கின்றார் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட தகவல்கள் உண்மையான தகவல்கள் என உறுதிப்படுத்துவதுடன், பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்டால் அவரை விடுவிக்க முடியும் / முடியாது எனத் தெரிவிக்கிறேன்.

மேலும் இந்த ஆட்சேர்ப்பு வெளிவாரியான ஆட்சேர்ப்பு எனவும் அவர் உரிய பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்தாலும் அல்லது செய்யாவிட்டாலும் எந்த விதத்திலும் தற்போது வகிக்கும் பதவிக்கு மீண்டும் வர முடியாது எனவும் அவருக்கு புரிய வைத்துள்ளேன் எனவும் தெரிவிக்கிறேன்.

திகதி : .....

.....
திணைக்களத் தலைவரின் ஒப்பம்
மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை

திணைக்களத் தலைவரின் பெயர் : .....

பதவி : .....

முகவரி : .....

10 - 523